சரவணை - பள்ளம்புலம்

அருள் மிகு முருகமூர்த்தி திருக்கோவில்

# ஓர் வரலாற்றுப்பார்வை



திரு. ச. மகாலிங்கம்

ஆசிரியர்

உ

சிவமயம்

சரவணை ~ பள்ளம்புலம்

# அருள்மிகு முருகமூர்த்தி திருக்கோவில்

# ஓர் வரலாற்றுப்பார்வை



ஓம் முருகா

# சரவணை - பள்ளம்புலம்
# அருள்மிகு முருகமூர்த்தி திருக்கோவில்
# ஓர் வரலாற்றுப்பார்வை


**திரு. ச. மகாலிங்கம்**

*ஆசிரியர்*

☆ பதிப்புரிமை
ஆசிரியருக்குரியது

| | | |
|---|---|---|
| பதிப்பு | : | முதலாம்பதிப்பு |
| பக்கங்கள் | : | 68 |
| வடிவமைப்பு | : | அ. கலைவாணி |
| அச்சுப்பதிப்பு | : | விகடன் பதிப்பகம்<br>கொழும்பு 06.<br>2504370 |
| விலை | : | |

இந் நூலின் விற்பனை மூலம் கிடைக்கப்பெறும் நிதி கூட்டுப்பிரார்த்தனை நிதியில் சேர்க்கப்படும்.



# சமர்ப்பணம்

**அமரர். மகாலிங்கம் சிவபாலன்**
**அவர்களிற்கு இந்நூல்**
**சமர்ப்பணம்**

# பொருளடக்கம் பக்கம்


| | |
|---|---|
| 1. முன்னுரை | 05 |
| 2. அணிந்துரை | 06 |
| 3. ஆசியுரை | 07 |
| 4. வாழ்த்துரை | 08 |
| 5. முருகவழிபாடு | 09 |
| 6. ஆலயஅமைவிடம் | 14 |
| 7. ஆலயத்தின் தோற்றுவாய் | 17 |
| 8. ஆலயச்சிறப்பும் அருள்பாலிப்பும் | 19 |
| 9. அறங்காவலர் நிர்வாகம் | 20 |
| 10. பக்திப்பாமாலைகள் | 21 |
| சரவணையூர் திரு. ஆ.தில்லைநாதப்புலவர் | |
| 11. முருகபக்தர் - திரு. வே.சுப்பிரமணியம் | 25 |
| 12. அறங்காவற்சபை நிர்வாகம் ஆரம்பம் | 27 |
| 13. 1964இல் ஓர் மறுமலர்ச்சி | 28 |
| 14. பள்ளம்புலம் ஸ்ரீ முருகன் கூட்டுப்பிரார்த்தனைச்சபை | 32 |
| 15.ஆலயப்பூசையில் அந்தணர்வரிசை | 35 |
| 16.கோயிற்காணிகள் | 38 |
| 17.கோயில் ஆதன அட்டவணை | 40 |
| 18.1990இல் போரும் புலம்பெயர்தலும் | 42 |
| 19.1997 ஆம் ஆண்டுக்குப்பின்... | 42 |
| 20.பள்ளம்புலம் முருகன் மீது பக்திப்பாமாலைகள் | 48 |
| (அ)சரவணையூர் திரு.ஆ.தில்லைநாதப்புலவர் | |
| (ஆ)திரு.தி.ஸ்ரீ கந்தராசா (அருள்) | |
| (இ)கவிஞர் திரு.வே.இராசலிங்கம் (கனடா) | |
| (ஈ)முருகதாஸ் | |
| (உ)கவிஞர்.தில்லைச்சிவன் | |
| 21. முருக நாமாவளி | 57 |
| 22. ஆலய விழாக்கள் பற்றிய விபரங்கள் | 65 |
| 23. ஆலயத்தின் முக்கிய நிகழ்வுகள் சில | 67 |

ஓம் முருகா

# முன்னுரை

பல நூற்றாண்டு காலப் பழைமை வாய்ந்த ஆலயம் சரவணை - பள்ளம்புலம் அருள் மிகு முருகமூர்த்தி திருக்கோவில் ஆகும். இவ்வாலயம் படிப்படியாக வளர்ச்சிபெற்று, இன்று சிறப்பான முறையில் நிர்வகிக்கப்பட்டு, இயங்கி வருவது பெருமைக்குரிய அம்சமாகும்.

ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமானின் அருட்சக்தி வியக்கத்தக்கது. இவ்வாலயத்தில் பக்திபூண்டு வணங்கி வருபவர்கள், இவ்வருட்சக்தியினை நன்கு அனுபவித்து வருகின்றனர்.

அத்தகைய பெருமை வாய்ந்த ஆலயம், வளர்ச்சியினைப் பெற்று, சிறப்புற இயங்கி வந்தாலும், அதன் வரலாற்றுப்பின்னணி யினை வெளிக்கொண்டு வருவதற்கு இதுவரை தவறிவிட்டோம். ஆலயத்தின் ஆரம்பகாலம் பற்றி சிலர்சிறிதளவு கூறி வருவதும்; அதனைப்பற்றி சிறுகட்டுரை வடிவில் எழுதி வருவதுமாகவே இருந்து வந்துள்ளனர். அதனால் ஆலயத்தின் முழு அளவிலான வரலாற்றினை ஓரளவாவது அறிந்து கொள்ளும் வாய்ப்பு எமக்குக் கிடைக்கவில்லை

இந்நிலையில் ஆலயத்தின் வரலாற்றினை ஓரளவாவது அனைவரும் அறிந்து வைத்திருக்க வேண்டுமென்ற ஆர்வமும், விருப்பமுமே இந்நூலினை எழுதத்தூண்டியதாகும். மேலும் ஆலய வளர்ச்சிக்காக அரும்பாடுபட்ட பெரியார்களை நினைவிற் கொண்டுவருவதும்; வருங்காலச் சந்ததியினர் அவர்கள் வழிநின்று ஆலயத்தொண்டுகளைச் செய்யவும் இந்நூல் ஓரளவு ஆதரவாக அமையுமெனக் கருதுகின்றேன்.

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய திரு.சி.தயாபரன், ஆசியுரை வழங்கிய சிவஸ்ரீ நா.யோகேஸ்வரக் குருக்கள், சிறப்புரை வழங்கிய திரு.ப.ஆரூரன் ஆசிரியர்,மற்றும் வேண்டிய பொழுது, உதவிகளை உடனுக்குடன் தந்துதவிய திரு.த.அருணகிரிநாதன் ஆசிரியர், திரு.தி.சிவநேசபிள்ளை ஆசிரியர், திரு.தி.ஸ்ரீகந்தராசா ஆகியோருக்கும் நன்றி உரித்தாகுக.

இந்நூலினை நல்ல முறையில் வெளியிட உதவிய விகடன் அச்சகத்தாருக்கும் எமது நன்றி உரித்தாகுக.

**ச.மகாலிங்கம்**
**(ஆசிரியர்)**

**சரவணை கிழக்கு**
**பள்ளம்புலம்**

ஓம் முருகா

# அணிந்துரை

ஆலய வரலாறு என்பது ஆலயத்தின் தொன்மை தொடக்கம், அவ்வக் காலப் பகுதிகளில் ஏற்பட்ட பல்வேறுபட்ட வளர்ச்சிப் படிநிலைகளையும் அதற்கான காரணங்களையும் விளக்கிக் கூறுவதாக அமைகின்றது. துரதிஷ்டவசமாக இவ்வரலாற்றுத் தொன்ம ங்களை கண்டறிவதற்கான சான்றாதாரங்களுடன் கூடிய ஆவணங் களை பேணிவராத மரபு எம்மிடையே பரவலாகக் காணப்படுகின்றது.

பள்ளம்புலம் ஸ்ரீ முருகமூர்த்தி கோவிலின் அருகாமையில் பிறந்து வளர்ந்தவரும், முருகன் மீது அளவிறந்த பக்திகொண்டவரும், அமைதியாய் இருந்து பல நற்செயல்களை ஆற்றவல்லவருமான ஆசிரியர் திரு.ச.மகாலிங்கம் அவர்களுக்கு ஆலயத்தின் தொன்மம் அதன் வரலாறு பற்றிய பதிவுகளைச் செய்ய முருகன் திருவருள் கூடியுள்ளமை குறித்து பள்ளம்புலம் முருகமூர்த்தி கோவிலின் வழிபடுநர்களாகிய நாம் மிகுந்த சந்தோசமடைகின்றோம்.

தொண்ணூறுகளின் இடப்பெயர்வுக்கு முன்னர் அம்மண்ணில் சுமார் முப்பது வருடங்காலம் வாழ்ந்த எனக்கு பள்ளம்புலம் முருகமூர்த்தி கோவிலில் என்னுள் பசுமையாக நிலைத்திருப்பது இரண்டு விடயங்கள்

**அ.** வெள்ளைவேட்டியை மடித்துக்கட்டி, மேனியில் அங்கவஸ்திரத்துடன் தினமும் திருப்பணி புரியும் அமரர் நா.இராமச்சந்திரன் அவர்களின் ஆஜானுபாகுவான தோற்றம்.

**ஆ.** இந்நூலின் ஆசிரியரால் முன்னின்று நிறுவப்பட்ட கூட்டுப்பிரார்த்தனைசபை அக்காலத்தில் யாழ்க்குடா நாட்டின் பல இடங்களிலும் கூட்டுப் பிரார்த்தனை நடாத்திய இளவயதுடைய இருபால் பக்தர்களின் இனிய அருட்பாடல்கள், இச்சபையினரால் நடாத்தப்பட்ட திருவெம்பாவை மணனப்போட்டி, அப்போட்டியில் பரிசு பெறும் களிப்பு.

ஆலய வரலாறுகளை நாங்கள் கற்பதன் மூலம் தெய்வத்தின் கருணையையும் அற்புதங்களையும் எண்ணி எண்ணி நாமும் பக்திப் பரவசத்தில் மூழ்குவதோடு மாத்திரமல்லாது மக்களினது கலை, கலாச்சார பண்புகளையும், பிரதேசத்தின் வளர்ச்சினையும் அறிந்து கொள்ளுவதோடு எதிர்காலத்தில் நாம் எவற்றை ஆற்றவேண்டும் என்பதையும் அது எமக்கு உணர்த்துகின்றது.

***சி.தயாபரன்***

ஓம் முருகா

**சரவணை பள்ளம்புலம் ஸ்ரீ முருக மூர்த்தி**

**ஆலய பிரதம குருக்கள்**



# வழங்கிய ஆசியுரை

மனிதர்களாகிய எம்மை வையத்து வாழ்வாங்கு வாழ நன்னெறிப்படுத்துவன சமயங்கள். முறை தவறிய நெறிகளில் செல்பவர்களைச் செந்நெறிப்படுத்தி உயர் நிலையடைய வாழ்க்கையில் சாதனைகளை எடுத்துக்கூறுவன சமயங்கள். சைவ சமயம் தொன்று தொட்டு போதனைகளையும் அப் போதனைகளை கடைப்பிடித்த பெரியோர்களையும் அவர்களின் வரலாறுகளையும் கூறுகின்றன. இவ் வகையில் புராணக் கதைகள் விரத மகத்துவங்கள் வழிபாட்டிற்குரிய விஷேட நியதிகள் எமது சமயத்தில் ஏராளமாக காணப்படுகின்றன.

இன்று எமது தமிழ் மண்ணிலே சைவ வாழ்வும் தமிழின் வளமும் மீண்டும் சீர் குலையும் நிலை உருவாகியுள்ளது. அதனைச்சீர் செய்ய பலரின் உழைப்புத் தேவைப்படுகின்றது.

இந்த வகையில் தீவகத்தில் சிறப்பு வாய்ந்த சரவணை எனும் கிராமத்தில் கலியுக வரதனாகவும் வேண்டுவார் வேண்டியதை அனுக்கிரகம் செய்து அருள்புரியும் முருகப்பெருமானின் உறைவிடம் பள்ளம்புலம் எனும் திவ்ய திருத்தலமாகும். அத்திருத்தலத்திலே பக்தியும், அறிவாற்றலும், ஆளுமை நிறைந்த பண்பாளனாகிய, முருக தொண்டன் ச.மகாலிங்கம் ஆசிரியர் ஆவார். இவர் பள்ளம்புலம் முருகப்பெருமான் ஆலய மகத்துவமும் வரலாறும் என்ற நூலை எழுதி வெளியிடுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைவதுடன் எல்லாம் வல்ல முருகப் பெருமானின் அனுக்கிரகம் கிடைக்க வேண்டி பிரார்த்தித்து அவருடைய நூல் சிறப்பாக மலர வாழ்த்தி நல்லாசி கூறுகின்றோம்.

**அத்தியடி** **சிவஸ்ரீ.நா. யோகீஸ்வரக் குருக்கள்**

**யாழ்ப்பாணம்**

ஓம் முருகா

**சரவணை ~ பள்ளம்புலம்**

**அருள்மிகு முருகமூர்த்தி திருக்கோவில் அறங்காவற்சபை**

# வாழ்த்துரை

எமது தீவகப் பிரதேசத்தில் சரவணை பள்ளம்புலம் அருள்மிகு முருகமூர்த்தி திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமானது அற்புதங்கள் வெளியில் பலருக்குத் தெரியாது. அவரை மனமுருகி வழிபடும் அடியவர்கள், உள்ளன்போடு அவருக்குத் தொண்டு செய்யும் அடியவர்கள் போன்றவர்களுக்கு மட்டுமே தெரியும். அவரது அருளாசிகளும், அற்புதங்களும் இவ்வடியார்களின் லௌகீக, ஆன்மீக முன்னேற்றத்திற்கு பெரிதும் உதவிபுரிகின்றதை இவர்கள் ஒவ்வொருவரும் உள்ளுணர்வில் உணர்வர். அத்துடன் எம்பெருமானது ஆலயபரிபாலனங்கள், நித்திய,நைமித்திய பூசைகள், விழாக்கள் என்பன நடைபெற இவரது அருளும்,அற்புதங்களும் எவ்வாறு துணைபுரிகின்றன என்பதை ஆலய ஆரம்பம் முதல் இன்று வரை நிர்வாகத்தில் இருந்த, தொழிற்பட்ட அன்பர்கள் எல்லோரும் உணர்ந்திருக்கின்றனர்.

இந்தவகையில் ஆசிரியப் பெருந்தகை திரு ச.மகாலிங்கம் அவர்களும் ஆலயத்திற்கு சிறுவயதுமுதல் இன்று வரை ஆலயத்திருப்பணி, பூசைநிதிய ஆரம்பம், கூட்டுப்பிரார்த்தனைச் சபை ஆரம்பம் என இப்படிப்பல்வேறு புனித கைங்கரியங்களை உள்ளன் போடும், ஆரவாரமின்றியும் செய்து வருகின்றார், என்பதை கிராமமக்கள் அனைவரும் அறிவர். இன்றும் முருகன் அவரது உள்ளத்தில் புகுந்து அவரைக் கருவியாக்கி முருகப்பெருமானது, பெருமை கூறும், காலத்தால் அழியாத கைங்கரியமான இந்நூலை வெளியிடும் அற்புதத்தை நிகழ்த்துகின்றார். இந்தவகையில் இவரும் ஒரு சிறந்த இறைபணியாளர் ஆவார்.

அறங்காவற் சபையினராகிய நாம் செய்ய வேண்டிய பணியைத் தாமே சிந்தித்து, தாமே ஆரம்பித்து தாமே நிறைவேற்றியும் வைக்கும் இப்பெரும் தொண்டிற்கு எமதுசிரம் தாழ்ந்த நன்றிகளும், வாழ்த்துக்களும் உரித்தாகுக.

**ப.ஆரூரன்**
**தலைவர்**

**அறங்காவற் சபை**
**21.02.2008.**

# முருகவழிபாடு

## முருகன் அவதாரம் :

**"பிரமமாய் நின்ற சோதி**
**பிளம்பதோர் மேனியாகி**
**ஒருதிரு முருகன் வந்தாங்**
**குதித்தனன் உலகமுய்ய"** என முருகனின் அவதாரத்தினை எடுத்தியம்புகின்றது கந்தபுராணம்.

சிவனின் நெற்றிக்கண்ணிலிருந்து புறப்பட்ட பொறிகள் ஆறு. அவை ஒன்றாகிச் சரவணப்பொய்கையில் பாலகுமாரனாக உருவெடுத்தது. கார்த்திகைமாதர் அரவணைப்பில் அவர் வளர்ந்தார். உலகினை வாழ வைக்க வந்த முருகன் ஆனார். அழகின் வடிவாக, ஆறுமுகனாக, ஆறு கடவுளுக்கோர் தத்துவ வடிவாக காட்சியளிக்கின்றார் முருகன்.

## குறிஞ்சிக்கடவுள் :

மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி நிலமாகும். ஆய்வாளரின் கூற்றுப்படி ஆதி மனிதன் முதன் முதலாக தோன்றிய இடம் குறிஞ்சி நிலமாக கருதப்படுகின்றது. இந்நிலத்தினிலே தான் முருகன் நிலை கொண்டு வளர்ந்தான். "குன்று தோறும் ஆடும் குகனே" என்றும், "எண்ணிலாக்கிரியில் இருந்து வளர்ந்தனன்" என்றும் போற்றப்படுகின்றார் முருகன். எனவே முருக வழிபாடு முதன்முதல் குறிஞ்சி நிலத்திலேயே முகுழ்த்ததெனலாம்.

## முருக வழிபாட்டுக்காலம் :

மிகத்தொன்மை வாய்ந்த காலத்திலிருந்தே முருகவழிபாடு மக்களிடையே இருந்து வந்துள்ளதென்பதை வரலாற்றுச் சான்றுகளும், இலக்கியச்சான்றுகளும் எடுத்தியம்புகின்றன.

குப்தர் காலத்திலேயே முருகவழிபாடு பாரதம் எங்கும் பரவியிருந்ததாகவும், அக்கால மன்னர்கள் பலர் முருகன் பெயர்களே சூட்டியிருந்தார்கள் என்றும் வரலாறு கூறுகின்றது.

இலக்கியச்சான்றினை எடுத்துக்கொண்டால் காளிதாசரின் "குமார சம்பவம்"என்னும் காப்பியம் முருக வழிபாட்டின் உன்னதமான வளர்ச்சிக்கோர் எடுத்துக்காட்டாக அமைகின்றது.

மேலும் "சேயோன் மேயமை வரை உலகம்" என்று தொல்காப்பியத்தில் முருகனைப் பற்றி எடுத்துக் கூறப்படுகின்றது.

தொல் காப்பியம் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது.

எனவே முருகவழிபாடு இதற்கு முன்பே மனிதகுலத்திற்கு வாழ்வாதரமாக இருந்திருக்கின்றதென்பது நன்கு புலனாகின்றது.

சங்ககால இலக்கியங்களாகிய ஐங்குறுநூறு, குறுந்தொகை, அகநானூறு போன்றவற்றிலும் முருகன் பெருமை பற்றிக் கூறப்படுகின்றது. "வெல்லும் போரே வல்ல முருகன்" என மலைபடுகடாமில் கூறப்படுவதும் குறிப்பிடற்குரியது. இவையாவும் முருகன் பற்றியும், முருகவழிபாட்டின் தொன்மை பற்றியும் அறிந்து கொள்ள ஏதுவாக உள்ளன.

## இந்துசமயமும் முருகவழிபாடும்:

இந்துசமயம் பல சமயங்களை உள்ளீடாகக் கொண்டது. அதாவது சைவம், சாக்த்தம்,வைஷ்ணவம்,சௌரம்,காணபத்தியம், கௌமாரம் ஆகிய ஆறு சமயங்களைக் கொண்டதே இந்துசமய மாகும்.

இவற்றில் கௌமாரம் என்பது முருகனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் நெறியாகும். இந்நெறி சங்ககாலத்தில் செழிப்புற்று, சிறப்புற்று விளங்கியது. முருகனே தமிழரின் முதற் கடவுளாகக் கருதப்பட்டு வந்தார்.

"அகத்தியமுனிவனுக்கு அன்புடன் தமிழை
செகத்தோர் அறியச் செப்பிய கோவே"

என்பதிலிருந்து முருகன் தமிழர் கடவுள் என்பது புலனாகின்றது.

முருக வழிபாடு என்பது சிவவழிபாட்டுடன் கலந்த ஓர் வழிபாடாகும். சிவனின் நெற்றிக்கண்ணிலிருந்து தோற்றம் பெற்றவரே முருகன். எனவே முருகவழிபாடு சிவவழிபாடாகவே கருதப்படுகின்றது.

முருக வழிபாட்டில் தனித்துவமான ஓர் சிறப்பம்சம் உண்டு. அதாவது இந்துசமயத்தில் அங்கமாக உள்ள அனைத்து சமயநெறிகளிலுமே ஊடுருவி நிலை கொண்டுள்ளது முருக வழிபாடெனக் கூறப்படுகின்றது.

இந்துமதத்துடன் சேராத பௌத்த மதத்தில் கூட முருகவழிபாட்டுமுறை கலந்து நின்று சமய சமத்துவத்தினைப் பேணிப் பாதுகாக்கின்றதெனலாம்.

எனவே முருகவழிபாடென்பது தொன்மையானது. தனித்துவமானது. மனிதகுலத்தினை வாழ்வாங்கு வாழ வைக்கும் செந்நெறியாகும்.

## முருகன் புகழ்பாடும் நூல்கள்:

சிவனை வாழ்த்தி, வழுத்தி, போற்றித் துதிப்பதற்கு சிவபுராணம், பெரியபுராணம், தேவார திருவாசகம் இருப்பது போல முருகனையும் போற்றி வழிபட நூல்கள் பல உள்ளன.

முருகனின் தோற்றம், வரலரற்றினை அறிந்து, தெளிந்து இன்பமுறக் கந்தபுராணம் வழிவகுத்துவிடுகின்றது.

நக்கீரன் அருளிய திருமுருகாற்றுப்படையும் அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, கந்தர்கலி வெண்பா என்பனவும் முருகன் மீது பாடிய சந்தம் மிகுந்த அருட்பாடலாகும். அவை முருகவழிபாடு செய்யும் அடியார்களுக்கு அந்தமில்லா ஆனந்தத்தினை பெற வைக்கின்றன.

மேலும் கந்தசஷ்டிக்கவசம், கதிரைமலைப்பள்ளு, மயில்விருத்தம் கந்தர்கலிவெண்பா என்பனவெல்லாம் கந்தன் புகழ்பாடி நம்மையெல்லாம் அந்தமில்லா ஆனந்தம் பெற வைக்கின்றன.

## முருகவழிபாட்டுத் தலங்கள்:

முருகன் வழிபாட்டுத் தலங்கள் பல தமிழகத்திலும் ஈழத்திலும் அமைந்து அருள் பாலித்து வருகின்றன.,

தமிழகத்தில்:

"திருப்பரங்குன்றம் சீரிபதிசெந்துார்
திருவாவினன்குடி திருவேரகம்
துய்ய பழநி சுப்பிரமணியன்
மெய்யாய் விளங்கும் விராலிமலை" என்பன

ஆறுபடைத் தலங்களாக இருந்து தமிழகத்தில் அருள் பாலித்து வருகின்றன.

ஈழத்தில் அமைந்துள்ள பல முருக வழிபாட்டுத்தலங்களுள் கதிர்காமம், நல்லூர், மாவிட்டபுரம், மண்டூர், செல்வச்சந்நிதி, குமரபுரம், வெருகல் சித்தாண்டி ஆகிய இடங்களில் அமைந்துள்ளவை பழமையும் பிரபலிக்கமும் கொண்டவையாக குறிப்பிடலாம்.

இவற்றை அடியொட்டியே மற்றைய முருக வழிபாட்டுத்தலங்கள் தோன்றி அடியார்க்கு அருள் பாலித்து வருகின்றன எனலாம்.

## முருகவழிபாட்டு முறை

முருகவழிபாடு இரு வேறுபட்ட வழிகளில் நடைபெற்று வருகின்றது. அவையாவன ஆகமம் சார்ந்த வழிபாடு, ஆகமம் சாராத வழிபாடாகும்.

ஆகமம் சார்ந்த வழிபாடென்பது ஆகம விதிகளுக்கு அமைவாக அமைக்கப்பட்ட ஆலயங்களில் நடைபெறும் வழிபாடாகும்.அத்தகைய ஆலயங்களில் நித்தியகிரியை, நைமித்தியக்கிரியை, காமிகப்பூசை என்பன நிகழ்த்தப்படுகின்றன.

ஆகமம் சாரா வழிபாட்டு முறைகளாக பூசாரியினால் வழிபாடியற்றல்,வாய்கட்டிப் பூசைசெய்தல், குருவையிட்டு அவன் புகழ்பாடுதல் என்பன இடம்பெறுகின்றன. இவை ஆகம முறைப்படி அமைவுறாத ஆலயங்களிலேயே நடைபெறுகின்றன.

இந்த வழிபாட்டுக்கு எடுத்துக்காட்டாக கதிர்காமம் செல்வச்சந்நிதி போன்ற முருகன் ஆலயங்களை கூறலாம். கதிர்காமம் புராதன வழிபாட்டுத்தலமாகும். ஆனால் ஆலயம் ஆகம விதிப்படி அமைக்கப்படாமலேயே அங்கு ஆகமம் சாரா வழிபாடு நடைபெறுகின்றது.

"கப்புறாளை" என்பவரால் வாய் கட்டி மௌன(மவுன) பூசை முறையே நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

## தீவகத்தில் முருகவழிபாடு:

பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தீவகத்தில் முருக வழிபாடு வளர்ந்து மலர்ந்து நிலைபெற்றுள்ளது. இவற்றுக்கு சான்றுகள் பல உள. அவற்றுள் முக்கியமானது தீவகத்தில் உள்ள கிராமங்கள் சிலவற்றிற்கு இடப்பட்டுள்ள பெயர்களாகும்.

இவற்றுள் சரவணை, வேலணை, கரம்பொன் என்பன குறிப்பிடத்தக்கவையாகும். முருகன் அவதரித்த சரவணபொய்கை யினையும், முருகன் கையில் இருக்கும் ஞான வேலினையும், முருகனின் பன்னிரு கரங்களினையும், சுட்டிக்காட்டும் பெயர்களாக அவை அமைந்துள்ளன. இது அக்கால தீவக மக்களின் முருக வழிபாடு எவ்வளவு ஆழமாக வேருன்றி உள்ளதென்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

மேலும் தீவகத்தில் அமைந்துள்ள முருகன் ஆலயங்களும் முருகவழிபாட்டின் வளர்ச்சியினை காட்டுவனவாக உள்ளன.

சரவணை : பள்ளம்புலம் அருள்மிகு முருகமூர்த்தி திருக்கோவில்
சரவணை : நாரந்தனை கர்ணந்தோட்ட கந்த சுவாமி கோவில்
சரவணை : கதிர்வேலாயுத சுவாமி கோவில்
வேலணை : மேற்கு சிற்பனை முருகமூர்த்தி கோவில்
வேலணை : வங்களாவடி முருகன் கோவில்
கரம்பன் : கரம்பன் மேற்கு முருகமூர்த்தி கோவில்
கரம்பன் : கிழக்கு முருகமூர்த்தி கோவில்
சரவணை : குடிசை குமரன்

ஆகிய ஆலயங்கள், தீவகத்தில் நிலைகொண்டு வளர்ந்துள்ளன. முருக வழிபாட்டின் தொன்மையினையும், மேன்மையினையும் வரலாற்று ரீதியாக எடுத்துக் காடடுபவனவாக இன்று திகழ்கின்றன.

தீவகத்தில் சைவமும், தமிழும் தழைத்தோங்கவும், கந்தபுராணக் கலாச்சாரம் நிலைகொள்ளவும் அன்று வாழ்ந்த சான்றோர்கள், தமிழ்ப்பெருங்குடி மக்கள் முருக வழிபாட்டினை வளம் பெற வளர்த்து வாழ்வாங்கு வாழ்ந்து வந்தனர் என்பதற்கு இவையெல்லாம் சான்றாக அமைந்துள்ளன.

“ பெரும்பைம் புனத்தின் உள் சிற்றேனல் காக்கின்ற பேதை கொங்கை
விரும்பும் குமரனை மெய் அன்பினால் மெல்ல மெல்ல உள்ள
அரும்பும் தனிப்பரமா னந்தம் தித்தித் தறிந்த அன்றே
கரும்பும் துவர்த்துச் செந்தேனும் புளித்துஅறக்கைத்ததுவே”.

-கந்தலங்காரம்-

♦ ♦ ♦

பாவவலர்க்கு அருள்புரி பாலனே வருக!
அன்பர்க்கு அருள்புரி ஆறுமுகா வருக!!
பொன்போல் சரவணை புண்ணியா வருக!!!

♦ ♦ ♦

சரணம் சரணம் சரவண பவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்!

♦ ♦ ♦

## சரவணை - பள்ளம்புலம்
## அருள்மிகு முருகமூர்த்தி திருக்கோவில்

# ஆலய அமைவிடம்

(அ) ஊர்காவற்றுறை கோவில்பற்று, சரவணை இறை-பள்ளம்புலம் மத்தியில், மயிலப்புலத்தின் தெற்கே, மயிலப்புலம் வீதியை அண்மித்து; சரவணை-பள்ளம்புலம் அருள்மிகு முருகமூர்த்தி திருக்கோவில் அமைந்துள்ளது.


(ஆ) மயிலப்புலத்தினை அண்மித்துச்செல்லும் பண்ணை-ஊர்காவற்றுறை வீதியினை வடக்குத் தெரு என்பர். இது இ.போ.ச போக்குவரத்து 777 இலக்கப்பாதையாகும். இதேபோன்று வேலணை மத்திய கல்லூரியினை அண்மித்துச் செல்லும் வேலணை - ஊர்க்காவற்றுறை வீதியினை தெற்குதெரு என்பர். அது இ.போ.ச போக்குவரத்து 780 இலக்கம் கொண்ட பாதையாகும்.

வடக்கு தெருவில் உள்ள மயிலப்புலம் சந்தியில் இருந்து, மயிலப்புலம் வீதி தெற்கு நோக்கிச்சென்று மத்திய கல்லூரிக்கு அண்மித்த, தெற்கு தெருவில் சேர்கின்றது.

மயிலப்புலம் சந்தியில் இருந்தும் வேலணை மத்திய கல்லூரியிலிருந்தும் ஏறக்குறைய சமதூரத்தில் மயிலப்புல வீதியின் தெற்கு புறமாக இவ்வாலயம் அமைந்துள்ளது. இவ்வாலயம் அமைந்துள்ள கிராமமே பள்ளம்புலம் என அழைக்கப்படுகின்றது. இவ்வாலயத்தின் வடக்கு வீதியிலிருந்து ஆரம்பிக்கும் முருகையா வீதி வடக்கு நோக்கிச்சென்று பண்ணை-ஊர்காவற்றுறை வீதியில் சந்திக்கிறது.

ஆலயத்தின் வடக்கு, தெற்கு, கிழக்கு பகுதிகளில் குடிமனைகள் செறிந்துள்ளன. பனை, தென்னை, வேப்பமரங்கள் செழிந்து வளர்ந்து காட்சியளிக்கின்றன.

மேற்குத்திசையில் ''பெரிய வயல்'' என அழைக்கப்படும் ''நெற் களஞ்சிய'' வயல்கள் பரந்து பட்டிருப்பதைக் காணலாம். இவ்வயல்கள் கோடையில் பரந்தவோர் வெளியாகக் காட்சியளிக்கும். மாரியில் பச்சைக்கம்பளம் விரித்தாற் போன்று பசுமைக்காட்சியுடன் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும்.ஆலயத்தினைச் சூழவர நான்கு புறமும் மருதமரங்கள் ,அரசமரங்கள்,புளியமரங்கள் வானாளாவ வளர்ந்து கிளைகளைப் பரப்பி நிற்கும் பசுமையான காட்சி ஆலயத்திற்கோர் இயற்கை அழகினை அளித்து வருகின்றதெனலாம்.ஆலயத்தின் **தலவிருட்சம் அரசமரமாகும்.**


Kayts
Naranthanai
Saravanai
Saravanai Junction
Mylappulam Junction
Arali Junction
Velanai
Punkudutivu
Arali
Ferry
Jaffna
Lagoon
Allaipiddi
Mandaitivu
☆ ஆலயத்தின் அமைவிடம்

மேலும்,

முருகன் ஆலயத்தின் வடதிசையில், மயிலம்புலம் அருள்மிகு ஐயனார் ஆலயமும், தென்திசையில், சரவணை கும்பிறுபிட்டி ஞானவைரவர் ஆலயமும், மேற்கில் சரவணை தெங்கங்குளம், நாச்சியார் ஆலயமும், கிழக்கில் வேலணை இலந்தைவனம் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயமும் அமைந்துள்ளன.

இவ்வாலயங்களை முருகனின் ஆலய வீதியின் நின்றே பார்க்கக் கூடியதாக இருப்பது மகிழ்ச்சிக்குரிய ஓர் அம்சமாகும். அக்காலச் சைவமக்கள் தங்கள் வழிபாட்டினுக்காக ஆலயங்களை எவ்வாறு அமைத்து வைத்துள்ளார்கள் என்பதையும் நாம் உற்றுணர்ந்து கொள்ளலாம்.

அடுத்து,

முருகன் ஆலயம் அமைந்துள்ள பதியில், (இடத்தில்) நிலத்தடி நீரின் சிறப்பினைப் பற்றியும் நாம் சிறிது அறிந்து கொள்ளவேண்டும்.

ஆலயத்தின் உள்வீதியில் (உட்பிரகாரத்தில்) அமைந்துள்ள தீர்த்தக்கிணற்றுநீர் ஒப்பற்ற சுவையும், புனிதமும் உடையதென்பது அனைவருமே அறிந்துள்ள உண்மையாகும்.

ஆலயத்துக்கு அண்மையிலும், அப்பாலும் எத்தனையோ கிணறுகள் உண்டு ஆனால் ஆலயக்கிணற்றுநீருக்கு ஈடாகமாட்டாதென்பது, அனைவரினதும் அனுபவக்கருத்தாகும். அந்நீர் எப்பொழுதுமே மென்மையும், தண்மையும், தூய்மையும், சுவையுமுடையதாக இருப்பதே காரணமாகும். இவ்விடத்தில் இத்தகை புனித நிலத்தடி நீர் காணப்படுவது, முருகன் திருவருளே என்பது எல்லோரினதும் எண்ணமாகும்.

எனவே பள்ளம்புலத்து முருகனின் ஆலய அமைவிடம் அனைத்து அம்சங்களோடும் சிறப்புற்றிருப்பது அவன் அருளே ஆகும்.

# ஆலயத்தின் தோற்றுவாய்

எமது கிராம மக்கள் குடியேறிய ஆரம்ப காலம் பற்றி சரியான கணிப்பு திட்டவட்டமாகத் தீர்மானிக்கமுடியாதுள்ளது. எனினும் அவர்களுடைய வாழ்க்கைமுறை சமயா சார ஒழுக்கத்திற்கு உட்பட்டதாகவும் இறை வழிபாட்டுணர்வுகள் நிறைந்ததாகவும் இருந்ததென அறியப்படுவதுடன் ஊகித்துக்கொள்ளவும் முடிகிறது.

கந்தசஷ்டி, விநாயகர்சதுர்த்தி, திருவெம்பாவை, சிவராத்திரி, நவராத்தரி, விரதங்கள் யாவும் பக்திபூர்வமாக அனுஷ்டித்து வந்தனர். ஓர் உள்ளார்ந்தமான சமய கலாச்சாரம் அன்று வாழ்ந்த மக்களிடையே நிலைபெற்று இருந்தது.

"கோயில் இல்லா ஊரில் குடியிருத்தல் ஆகாது" என்ற உயரிய கோட்பாட்டிற்கு அமைய அக்காலமக்கள் ஆலயங்கள் பல அமைத்து வழிபாடும் செய்தும் வந்துள்ளனர்.

இந்த வகையில்,சரவணை - பள்ளம்புலம் முருகன் ஆலயமும் தோற்றம் பெற்றது.

வயலும் வயல் சார்ந்த மருத நிலத்தின் கண்ணே, மருத மரங்கள் வளர்ந்தோங்கி நிழல் பரப்பி வளங்கொளிக்க, நடுவண் கம்பீரமான தோற்றத்துடன் அழகுற அமைக்கப்பட்டு கண்ணுக்கும்,கருத்துக்கும் விருந்தாகச் சரவணை பள்ளம்புலம் அருள் மிகு முருகமூர்த்தி கோவிலாக இன்று காட்சி அளிப்பதைக் காண்கின்றோம்.

இவ்வாலயம் ஏறக்குறைய முன்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கருதப்படுகின்றது.

இவ்வாலயத்தின் ஆரம்ப கர்த்தாவாகக் கருதப்படுபவர் **முதல்வி அம்மையடியார்** என்பவராகும், நில - புலவளமுள்ள இறைபக்தி நிறைந்த இவரால் ஆரம்பத்தில் கொட்டில் வடிவில் ஆலயம் அமைக்கப்பட்டதென்றும், அதில் **வேலினை இஸ்தாபனம்** செய்து, வழிபாடு நடைபெற்றுவந்ததாகவும் கூறப்பட்டு வந்தது.

அப்பொழுதுள்ள மக்களின் இறைபக்தி உணர்வுகளுக்கும், சமய உணர்வுக்கும் ஏற்ப அருளாளர் அம்மைஅடியார், தொடங்கி வைத்த இவ்வழிபாட்டுத் தொண்டு, பள்ளப்புலத்து மக்களாலன்றி, தீவகமக்களாலும் மறக்க முடியாத ஓர் தெய்வீக வரலாற்று ப்பதிவாகும்.

அன்று எமது கிராம மக்கள் முருகவழிபாட்டில் ஆழமான ஈடுபாடு கொண்டவர்களாக வாழ்ந்து வந்தார்கள்.

முருக வழிபாட்டுடன், விரதங்களையும் ஒழுங்காக அனுஷ்டித்து வந்ததுடன், ஆலய யாத்திரைகளையும் சிறப்பான முறையில் செய்து வந்தனர்.

கதிர்காமக் கோவில் உற்சவ விழாக்களின் போது பாத யாத்திரையினை மேற்கொண்டு வந்தனர். அடர்ந்த காடுகளின் வழியே சென்று கதிர்காமக் கந்தனை தரிசித்து வந்தனர்.அதன் மூலம் முருகன் மீதுள்ள பற்றுறுதியினையும் காட்டினர். யாத்திரையின் பின்னர் தமது இல்லங்களில் "பூசை" வைத்து கந்தன் காட்சியினை கருத்தில் வைத்து ஆன்மீக நிறைவு பெற்றனர்.

இவற்றோடல்லாமல் அக்காலத்தில் தென்னிந்திய யாத்திரைகளையும் எமது கிராம மக்கள் செய்து வந்தனர். திருப்ப ரங்குன்றம், திருச்செந்தூர், பழநி, போன்ற முருக ஸ்தலங்களையும் சிதம்பரம், மதுரைமீனாட்சி போன்ற சிவ,சக்தி ஸ்தலங்களையும் பல சிரமங்களுக் கூடாகத் தரிசித்து இறைபக்தியினை வளர்த்ததுடன், இறை அருளையும் பெற்றனர்.

அன்று வாழ்ந்த எமது கிராம மக்கள் இறை வழிபாட்டில் சிறப்பாக முருக வழிபாட்டில் மேன்மையுற்று வாழ்ந்தார்கள் என்பதற்கு இவையாவும் எடுத்துக்காட்டாகவுள்ளன. இவ்வுணர்வலைகளிடையே தான் பள்ளம்புலம் முருகன் ஆலயமும் சிறப்பாக இயங்கி வரலாயிற்று அம்மையடியாரால் ஆரம்பிக்கப்பட்ட **"வேல்" கோயிலில்** கந்தபுராணப் படிப்பினை மிக உன்னதமான நிலையில் செயற்படுத்தி வரலாயினர்.

கந்தபுராணம் படிப்போர்,பயன் சொல்லுவோர்,கேட்போர் பலர்ஆலயத்திற்குவரலாயினர். அவர்களிடையே அறிவாற்றல் வளர்ந்தது.பயபக்தி, இறையுணர்வு மேலோங்கின.சைவமும், தமிழும் தழைத்தோங்கும் ஓர் திருப்பதியாக ஆலயம் விளங்கலாயிற்று.

ஆற்றலும், அறிவும், ஆசாரமும், இறைபக்தியும் கொண்ட சைவச்சான்றோர் பலர் கந்தபுராண நிகழ்வில் ஈடுபடலாயினர்.

கந்தபுராண நிகழ்வில் பங்கு கொண்டு சிறப்பித்து வந்த பெரியார்களைக் காலக்கிரமப் படி பின்வருமாறு நிரல்படுத்தலாம்:

**திருவாளர்கள்:** ம.தம்பு உபாத்தியாயர்,ஆ.தில்லைநாதப்புலவர்,

ச.மகாலிங்கம் விதானையார், சரவணை சோமசுந்தரம் வைத்தியர், ஐ.பொன்னையா உபாத்தியாயர், க.முத்தையா அவர்கள், உட்பட மேலும் பலர் கலந்து கொண்டதாகக் கூறுவர்.

கந்தபுராணப் பாடல்களைப் பண்ணுடன், இனிய குரல்நயத்துடன் பாடிக்கொடுத்தவர்களில்

**திருவாளர்கள்:** நா.நடராசா உபாத்தியாயர், நா.சுப்பிரமணியம், க.தியாகராசா, நா.ஆறுமுகம், நா.கந்தையா ஆகியோர் குறிப்பிட தகுந்தவர்களாக இருந்தனர்.

இப்பெரியார்கள் அனைவரின் பங்களிப்பால் கந்தபுராண நிகழ்வுகள் சிறப்பான முறையில் வளர்ச்சி பெற்றது.ஆலயம் ஓர் கந்தபுராணக்கலைக் கோவிலாகக் காட்சியளித்தாகக் கூறப்படுகின்றது. அதனால் சமய உணர்வும், தமிழ் உணர்வும், இறையுணர்வும் அடியார்களிடையேயும், அயலவர்களிடையேயும் நிலைகொண்டு வளரத் தொடங்கின.

பள்ளம்புலத்துக்கோர் முருகன் ஆலயம் ஆகமவிதிப்படி உருவாகியது.அந்தணர் பூசையும், சமய அனுஷ்டானங்களும், பல்வகை விழாக்களும் இறைபக்தியுடன் இடம்பெறலாயின.

# ஆலயச்சிறப்பும் அருள் பாலிப்பும்!

ஆலயம் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. வெளிமண்டபத்தினுள் பிரவேசித்ததும் ஆலயத்தின் எடுப்பான தோற்றம், எம் உள்ளத்தில் ஓர் தெய்வீக ஆர்வத்தினை உடன் எழுப்புவதை உணரலாம்.

மூலஸ்தானத்தில் முருகன் வள்ளி தெய்வானையுடன் வீற்றிருக்கும் காட்சியினைக் கண்ணுற்றதும் எம்மை அறியாமலே கரங்கூப்பி வணங்கி விடுகின்றோம்.

ஆலயத்தினுள் சென்றுவிட்டால் பூரண மனநிறை வினையும், அமைதியினையும் பக்தி உணர்வினையும் பெறுகின்றோம்.முருகனின் அருட்பார்வைக்கும் ஆட்படுகின்றோம்.

ஒவ்வோர் ஆலயமும் அருள்பாலிக்கும் தன்மையில் வெவ்வேறு இயல்புடையதாக இருக்கும் என்பது அடியார்களின் அனுபவரீதியான நம்பிக்கையாகும். இவ்வுண்மையினை நம் நாட்டில் மட்டுமல்ல தமிழ் நாட்டிலும் ஆழப்பதிந்திருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

குறித்த ஓர் ஆலயத்திற்குச் சென்று வழிபடின், பூசை வைப்பின், நாம் விரும்பும் நோக்கத்தினை, காரியசித்தியினை நிறைவேற்றலாம். என்பது இறையுணர்வுடையவர்களின் நம்பிக்கையாகும்.

இந்த வகையில் பள்ளம்புலம் முருகன் ஆலயத்திற்கும் அருட் சிறப்புகள் பல உள.முதலில், கல்விக்குரிய கந்தன் பள்ளம்புலக் கந்தனாகும்.கல்விச் செல்வத்தினை அள்ளித்தந்து அருள் பாலிக்கும் தன்மை இவ் ஆலயத்திற்கு உண்டென்பது அனுபவவாயிலாக அறிந்து, தெளிந்த உண்மையாகும். குழந்தைப்பாக்கியம் வேண்டி நேர்த்திக்கடன் செய்யும் அடியவர்களுக்கும் முருகன் அனுக்கிரகம் உறுதியாக உண்டென்றும் கூறுவர்.மேலும் அடியார்களின் துன்பம் களைந்து தீமைகள் அகற்றி, சிந்தைதனைத் தெளிய வைத்து, அவர்கள் வேண்டுவன வேண்டியாங்கு அருள் பாலிப்பவர், பள்ளம்புலத்து முருகனாகும். **மூர்த்தி, தலம், தீர்த்தம்** மூன்றும் ஒருங்கே அமையப்பெற்ற தலமாகப்பள்ளம்புலம் முருகன் ஆலயம் விளங்குகின்றது.

## அறங்காவலர் நிர்வாகம்

வளர்ந்து வந்த ஆலயமும் அதன் நிர்வாகப் பொறுப்பும் அம்மை அடியார் பரம்பரையினரிடம் தொடர்ந்து வரலாயிற்று. இந்நிர்வாகம் யார் யாரிடம் எவ்வளவு காலத்திற்கு தொடர்ந்திருந்து வந்ததென்பது வரையறுத்துக் கூறமுடியாத நிலையில் உள்ளது. எனினும் அம்மைஅடியார் பரம்பரையினைத் தொடர்ந்து, ஆலயம் அமரர் **திரு. மு. சிற்றம்பலம்** அவரின் பொறுப்பில் வந்தது.

திரு.மு. சிற்றம்பலம் அவர்களும் ஓர் சிறந்த முருக பக்தர். ஆலயக் கருமங்களையும், நித்திய பூசைகளையும், காலந்தவறாது கண்ணுங்கருத்துமாக இருந்து நடாத்தி வரலானார்.குறித்த நேரத்தில் ஆலயமணி ஒலிக்காது விடின் துடித்து பதைத்து துன்பப்படுவாராம். ஆலயமணி கேட்ட பின்னரே அமைதியடைவாராம்.

இவரின் காலத்தில் கந்தசஷ்டி, நவராத்திரி, திருவெம்பாவை போன்ற சிறப்புப் பூசைகள் பயபக்தியுடன் நடைபெற்று வரலாயின. அலங்காரத்திருவிழாக்களும் நடைபெற்று வந்ததாகக் கிராமமக்கள் கூறியதை அறிந்துகொண்டோம்.

கந்தபுராணப் படிப்பும் ஆலயத்தின் முக்கிய நிகழ்வாக சிறப்புற நடைபெற்று வந்தது. இதன் பலனாக கந்தபுராணம்

படிப்பதிலும் பயன் சொல்லுவதிலும் ஆற்றல் வாய்ந்த பலர் தோன்றலாயினர். ஆலயச் சூழலிலும், அப்பாலும் படித்த பெருமக்கள் தோன்றக் காரணமாக அமைந்தது கந்தபுராண படிப்பேயாகும்.

ஏறக்குறைய எண்பது வயதுவரை ஆலய நிர்வாகப்பொறுப்பு இவரிடமே இருந்து வந்தது. மேலும் தான் தொடர்ந்து இப்பொறுப்பில் இருப்பதை இவர் விரும்பவில்லை. எனவே தனது தம்பியாரான சீனிவாசகம். அவர்களோ நோயுற்று இருந்தமையால், திரு.வி. சேதுகாவலரிடம் ஆலயநிர்வாகப்பொறுப்பினை ஒப்படைக்கலாமென்ற முடிவினுக்கு வந்தார்.

# பள்ளம்புலக்கந்தன் மீது பக்திப் பாமாலைகள்

இக்காலத்தவராகத் திகழ்ந்தவர் தான் அமரர் சரவணையூர் செந்தமிழ்ப்புலவர் ஆ. தில்லைநாதர் அவர்கள்.

தில்லைநாதப் புலவரின் கலையாற்றல் ஆலயத்திற்குப் பல வழிகளிலும் பயனளிக்கத் தொடங்கியது. இவர் தலைமையிலும், கண்காணிப்பிலும் கந்தபுராணப்படிப்பு ஆலயத்தில் சிறப்புற நடைபெற்று வரலாயிற்று. முருகன் அருளாற் பெற்ற கலைச்செல்வமே அவரைப் புலவர் பெருமானாக்கியது.

முருகன் புகழ் பாடுவதில் ஆர்வம் கொண்டார். பள்ளம்புலம் முருகப்பெருமான் மீது பக்திப்பாமாலைகள் பல ஆக்கி அளித்தார். அவர் ஆக்கிய நூல்கள்:

**"சரவணை - பள்ளம்புலம் முருகமூர்த்தி திருவீரட்டமணிமாலை"**
**"திரு முருகரலங்காரம்"**
**"முருக மூர்த்தி திருப்பதிகம்"**
**"சரவணை - பள்ளம்புலம் யகம வந்தாதி"**
**"சரவணை - பள்ளம்புலம் முருகமூர்த்தி திருவூஞ்சல்"**
என்பனவாகும்.

இந்நூல்கள் அனைத்தும் ஆலயத்தின் சிறப்பியல்புகளை, பள்ளம்புலத்து முருகனின் மகிமையினை, அருள்பாலிப்பை அழகுற வெளிப்படுத்திக் காட்டுவனவாகவுள்ளன. மேலும் அகவளர்ச்சிக்கும் , ஆன்மீக வளர்ச்சிக்கும் அவை உறுதுணையாக இருந்து வருகின்றன.

தில்லைநாதப்புலவர் ஆக்கிய முதல் பக்தி இலக்கியநூல் "சரவணை - பள்ளம்புலம் முருகமூர்த்தி திருவீரட்ட மணிமாலை ஆகும்.

அதில் பள்ளம்புலம் முருகனை நினைத்துப் பாடிய பாடலொன்று:

**"நன்றுறல், தீதறல் வேண்டினவற்றை நல்குமருட்
குன்றென மேவி நன்குன்று தோறாடிக் குன்றார்முனிக்கு
தென்றமிழ் போதித்தெம் பள்ளம்புலத் திருகோவில் கொண்ட
மின்றவழ் வேற்கர வள்ளலைப் போற்றுதிர் மேலவரே"**

இப்பாடல் பள்ளம்புலத்து முருகனின் பெருமையினையும், புலவரின் புலமையினையும், முருகன் மீது புலவர் கொண்டுள்ள ஆழமான பக்தியினையும் ஒருங்கே எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

பள்ளம்புலத்து முருகனை புலவர் அகங்குளிர வேண்டி நிற்கும் ஓர்காட்சி. இதனை "சரவணை பள்ளம்-புலம் திருமுருகரலங்காரத்தில்" உள்ள ஓர் பாடலிற் காண்போம்.

**" கந்தா நமமயில் வந்தாய் நமவயில் கைப்பரித்த
எந்தாய் நமசிவன் மைந்தா நமவிண் இமையவர்க்குத்
தந்தாய் நமஅருட்சிந்தே நமநற் சரவணத்தில்
வந்தாய் நமதிருப் பள்ளம்புலத்து வரநமவே"**

என முருகனை நோக்கி பாடிப்பரவுகின்றார் புலவர்.

அவர் முருகனை நோக்கி கந்தா, எந்தாய், தந்தாய், மைந்தா, அருட்சிந்தே சரவணத்தில் வந்த நமது பள்ளம்புலத்துச் செல்வமே வருக வருகவென அகம் நெகிழ அழைக்கின்றார். இவ்வழைப்பில், இறையுணர்வும், அன்பின் குழைவும், அருள் வேட்கையும் ஊறி நின்று ஊற்றெடுப்பதை நாம் இப்பாடலிற் கண்டு இன்புறலாம். அதுமட்டுமன்றி புலவரின் கவித்துவத்திறனையும் இப்பாடலில் நாம் காண்கின்றோம்.

தொடர்ந்து, பள்ளம்புலத்து முருகனிடம், இரந்துநின்று வரமொன்றினைப் புலவர் வேண்டி நிற்கின்றார். அதனை "திருப்பள்ளம்புலயகமவந்தாதியில்" உள்ள பாடல் ஒன்றிற் காண்போம்.:

**"நின்மலனே மலமாயை கன்மங்களை நீக்கவல
நின்மலனே மலமாயையின் மைந்தனை நீள்கொடியும்
நின்மலனே மலநீங்கிய மஞ்ஞையு மாக்கியமா
நிமல வம்புல என்மல நீக்கலும் நின்கடனே"**

ஆன்மாவினைப் பீடித்துநிற்கின்ற ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் நீக்கவல்ல நின்மலனே (மலமற்றவன்) ஆணவத்தின் முனைப்புக் கொண்ட சூரனைத்தடிந்த முருகனே, மலம் நீங்கியபின் மயிலாக ஆட்கொண்ட கந்தனே, பள்ளம்புலத்தில் வீற்றிருக்கும் முருகனே எனது மலத்தினையும் நீக்கி அருள்வாயாக என்று அன்புருக வேண்டி நிற்கின்றார் புலவர்.

பாடலின் அமைப்பும், அழகும், சந்தமும் பொருளும் படிப்போர் உள்ளங்களில் கவியின்பத்தினை ஊட்டுவனவாக உள்ளன.

அடுத்து பிறிதோர் பாடல். இது புலவர் ஆக்கிய "பள்ளம்புலம் முருகமூர்த்தி திருப்பதிகம்" என்ற நூலில் இருந்து எடுத்ததாகும்.

இப்பாடலில் பள்ளம்புலத்து முருகன் எழுந்தருளியிருக்கும் நிலையில் அவரின் தோற்றத்தினையும் அழகையும், அணிகலன்களையும், அடியார்களுக்கு அருள் பாலிக்கும் தன்மையினையும் அழகுற அமைத்துக் காட்டுகின்றார் புலவர். அப்பாடல் இதோ:

**"பொன்னிழை கொடு செய்து நவமணி**
**யழுத்தி யொளி பொலி மௌலி மூவிரண்டும்**
**பொற்புற்ற நெற்றியில் சுட்டியும் பட்டமும்**
**புகலுமிரு பாலுமிலகி**
**மன்னியழ கெய்தலிற் றருகின்ற காதணிகள்**
**வருகுழைகள் பன்னிரண்டும்**
**மார்பிலணி யுந்தவள ரத்தின மதானியும்**
**வயினுதர பந்தனமுநன்**
**குன்னு பய பாதமலர் களிலிட்ட**
**தண்டையும் ஒலிக்கும் சிலம்புமழக**
**துறுசிறு சதங்கையும் உளங் குளிர**
**வேகலின் கலினெனப் புகழையடியார்**
**பன்ன மயில் மீதிவர்ந்து இருவரொடு**
**வந்தருட்பாலிகை லாசபதியின்**
**பால குக குமர சுப்பிரமணிய பள்ளம்**
**புலத்தளிச் சரவணபவா"**

பள்ளம்புலத்துப் பாலகுமாரன் அழகே வடிவாக எழுந்தருளியிருக்கின்றார். அவருடைய ஆறுதிருமுடிகளும்

பொன் வடிவானவை. நவரத்தினங்கள் பதிக்கப்பட்டவை. அவை ஒளி வீசிக்கொண்டிருக்கின்றன. நெற்றியில் சுட்டியும், பட்டமும் முருகனை அழகு செய்கின்றன. பன்னிருசெவிகளில் காதணிகளும், மார்பில் அணிந்துள்ள இரத்தின மதானியும், திருப்பாதங்களில் இட்ட தண்டையும் ஒலிக்கும் சிலம்புகளும் முருகனை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றன.

இந்நிலையில் பள்ளம்புல முருகன் வள்ளி தெய்வானையுடன் மயில்மீதிலமர்ந்து அடியார்களுக்குக் காட்சி கொடுத்து அருள்பாலிக்கின்றார்.

இதுவோர் எழில்மிகு காட்சி. புலவர் அதனைத் தன்பாடலில் வடிவமைத்துக் காட்டுகின்றார்.

அடுத்து "பள்ளம்புலம் முருகமூர்த்தி திருவூஞ்சலில் ஒரு பாடலை நோக்குவோம் :

**"செய்யவர விந்த முகத்து அருள்நின்றாடச்**
**செவி மகர குண்டலங்காற் சிலம்பொடாட**
**உய்யவரு மயிலாடச் சேவலாட**
**ஒலியலெழில் ஆலவட்டஞ் சிவிறியாட**
**மெய்யடியார் கைகளில் வெண்கவரியாட**
**வித்தக நற்பக்தர்கள் ஆனந்தத்தாட**
**ஐயுள பள்ளம்புலத்தில் வள்ளி தெய்வ**
**யானை யொடுந்திருமுருக ஆடீருஞ்சல்"**

பள்ளம்புலக்கந்தனின் திருக்கல்யாண நாள். வள்ளி - தெய்வயானையுடன் முருகன் திருவூஞ்சலாடும் காட்சியினைப் புலவர் பத்துப்பாடல்களில் பாடியுள்ளார். அவற்றில் ஒன்று இதுவாகும். பள்ளம்புலத்து முருகன் வள்ளி - தெய்வயானையுடன் திருவூஞ்சல் ஆடும் நிலையில், அவர் வதனத்தில் அருளொளி நின்றாடுகின்றது. செவியணிகுண்டலங்கள், காற்சிலம்போடு சேர்ந்தாடுகின்றன. அவற்றோடு முருகனின் மயிலும், சேவலும் உடன்சேர்ந்தாடுகின்றன. ஆலவட்டமும் ஆடுகின்றது. அடியார் கரங்களில் உள்ள வெண்கவரி ஆடுகின்றன. இவற்றையெல்லாம் பார்த்து பேரின்பத்தில் நிற்கும் அடியார்களும் ஆனந்தகூத்தாடுகின்றனர் என அருமையான காட்சியொன்றினைத் தந்து பூரிப்படைய வைக்கின்றார் புலவர்மணி.

இவ்வாறு பள்ளம்புலத்திருப்பதியில் நிலைகொண்டுள்ள முருகனை, நினைந்து பாடிய ஐந்து பக்திப்பனுவல்களும், அம்முருகனின் பாதாரவிந்தத்தில் புலவர் சமர்ப்பித்துச் சென்ற ஐந்து நந்தா விளக்குகளாகும்.

மேலும் பள்ளம்புலத்து முருகன் மீது பாமாலை சூட்டியவர்களில் வித்துவான் க.வேந்தனார் அவர்களும் ஒருவராவர்

அவர் பள்ளம்புலத்திலேயே வளர்ந்து வாழ்ந்த அறிஞர், புலவர், இலக்கிய மேதையாவார். சிறுவயதிலிருந்தே பள்ளம்புலம் முருகன் ஆலயத்திற்கு அண்மையிலேயே இருந்து வாழ்ந்து வந்தார். அவரும், அவர் நண்பர்களும் தங்கியிருந்து, அறிவினையும், ஆனந்தத்தினையும், மனஅமைதியினையும் பெற்றுக்கொள்ளும் புனித இடமாகப் பள்ளம்புலம் முருகன் ஆலயம் அமைந்திருந்ததாகப் பலர் கூறுவர்.

பள்ளம்புலம் முருகன்மீது வித்துவான் வேந்தனாரும் பக்திப்பாடல்கள் சில ஆக்கியுள்ளார். ஆனால் நாம் முயன்றும் அவற்றைப்பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு எமக்கு இது வரை கிடைக்கவில்லை.

## ஆலயப்பணியில் முருக பக்தர் அமரர் வே. சுப்பிரமணியம் ஐயா

இதே காலப் பகுதியிற்றான் வே. சுப்பிரமணியம் ஐயா அவர்களும் ஆலயத்திற்குப் பெரும் பணிகளை ஆற்றி வரலானார்.

இவர் ஓய்வு பெற்ற ஓர் அரச உத்தியோகத்தர். பள்ளம்புல முருக மூர்த்தி கோவிலில் மிகுந்த பற்றும் ஈடுபாடும் கொண்டிருந்தார்.

ஆலயத்தினசரி பூசையில் தவறாது கலந்து கொள்வார். ஆலயத்திற்குவரும் பொழுது தினமும் பால், வெற்றிலை, பாக்கு, மலர்களுடன் வருவார் இதனை அவரோ- துணைவியாரோ தவறாது செய்து வருவது வழமை: பூசை நிறைவேறும் வரையிருந்து முருகனைத் தரிசித்துச் செல்லும் ; தனித்துவமான பண்பு இவரிடம் இருந்தது.

ஆலயத்திருப்பணிகளில் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபட்டு வந்தார். சபா மண்டபத்திற்கு அத்திவாரம் இட்டு அதனை

முழுமையாக நிறைவேற்றி வைத்தார். பிள்ளையார், வைரவர் ஆலயங்களுக்கு அத்திவாரமிட்டு சுவர்களும் அமைப்பித்தார்: ஆலயச்சுற்று மதிலை மிக உயரமாக அமைத்து வைப்பதற்குப் பெருமுயற்சியினை மேற்கொண்டு நிறைவேற்றி வைத்தார்.

இவற்றுடன் மட்டுமல்லாது ஆலயத்திற்குத் தேவையான அரும்பெரும் கைங்கரியங்களை நிறைவேற்றி வைத்த பெருமை இவருக்கும் இவரது குடும்பத்தினருக்கும் உண்டு. இவற்றினை விரிக்கிற்பெருகும்.

இவர் காலத்திற் தான் முக்கிய நிகழ்வொன்று அடியார்களின் பேராதரவுடன் நிறைவுற்றது.

ஆலயத்தில் நடாத்தப்பட்ட பெரும் கும்பாபிஷேக நிகழ்வுடன், கர்ப்பக்கிரகத்தில் "வேல்" இருந்த இடத்தில் **முருகனின் திருவுருவம் வள்ளி, தெய்வானையுடன் பிரதிஷ்டை செய்யப்பட்டது.**

இது ஓர் வரலாற்று நிகழ்வாகும். இதனைத் தொடர்ந்து அலங்காரத் திருவிழாக்களும் மற்றும் சிறப்பு விழாக்களும், ஒழுங்காக நடைபெறலாயின.

காலம் கடந்தது. அவ்ரின் உடலும் உள்ளமும் தளர்ச்சி கண்டது. ஆனால் ஆன்மீக உறுதி மட்டும் தளரவில்லை. அதற்குக் காரணம் பள்ளம்புலம் முருகன் மீது உள்ள பற்று அகத்தில் ஆழமாகப் பதிந்து விட்டமையாகும்.

இவ்வுண்மையினை உறுதிப்படுத்துவதற்கு செவி வழி கேட்டறிந்த ஓர் செய்தியினை அறிய வைப்பது நல்லதாகும்.

இவரின் மனைவி, மக்கள் அனைவரும் கொழும்பிலும், வெளிநாடுகளிலும் குடியேறி வாழ்ந்து வந்தனர். தம்முடன் வரும்படி பலமுறை வற்புறுத்திக் கேட்டனர். ஆனால் அவர் மறுத்து விட்டாராம். காரணம்:

பள்ளம்புலம் முருகனின் மணியோசை கேட்டுக்கொண்டே தனது உயிர் பிரிய வேண்டும் என்பது அவ்ரின் திடசங்கல்பமாக இருந்ததாம்.

பள்ளம்புலம் முருகன் மீது பற்று உறுதி கொண்டு வாழ்ந்து காட்டிய பெருமக்கள் வரலாற்றினையும் நாம் அறிந்திருக்க வேண்டியது தலையாயக் கடமை அல்லவா?

# அறங்காவற் சபை நிர்வாகம் ஆரம்பம்

திரு. மு. சிற்றம்பலம் அவர்கள் தனது இறுதிக்காலத்தில் ஆலய நிர்வாகப் பொறுப்பினை **திரு. வி. சேதுகாவலரிடம்** ஒப்படைத்தார். இவர் ஓர் ஆசிரியராகவும், நொத்தாரிசாவும் கடமையாற்றினார்.

திரு. வி. சேதுகாவலர் ஆலய அறங்காவலராக சில ஆண்டுகளாக கடமையினை ஆற்றி வரலானார். நிர்வாகத்தினைக் கொண்டு நடத்துவதில் ஏற்பட்ட சிரமங்கள் காரணமாக ஆலய நிர்வாகப் பொறுப்பினை ஓர் **அறங்காவற் சபையிடம் ஒப்படைப்பதற்கு முடிவு** செய்தார்.

அவரின் முடிவுப்படி 1957ம் ஆண்டு ஆலயத்தின் நிர்வாகப் பொறுப்பு **அறங்காவற் சபையிடம்** ஒப்படைக்கப்பட்டது.

அறங்காவற் சபையின் தலைவர் பொறுப்பினை திரு. வி. சேதுகாவலர் ஏற்றுக்கொண்டார். சபையின் உறுப்பினர்களாக திரு. நா. நடராசா உபாத்தியாயர்,திரு.வே.சங்கரப்பிள்ளை, திரு.சி.நடராசா திரு. பொ. வெற்றிவேலு, திரு. வே. சுப்பிரமணியம் போன்றோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இதன் காரணமாக ஆலய வளர்ச்சியில் ஓர் உத்வேகம் உண்டாகியது. " பிடியரிசித் திட்டம்","புகையிலைச் சேர்ப்பு" போன்ற வருவாய்க்குரிய திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

அடியார்கள் ஆலயத்தினைப் பற்றி சிந்திக்கவும், அதன் முன்னேற்றத்திக்காகச் செயற்படவும் வழி வகுத்தது. தமக்கும் ஆலயத்தில் பங்குண்டென்ற ஓர் எண்ணமும், ஓர் உரிமை யுணர்வும் கிராம மக்களிடையே ஏற்படலாயிற்று.

சபையின் ஓர் உறுப்பினராக இருந்த அமரர் திரு. வெ. சங்கரப்பிள்ளை ஆலயத்தின் வளர்ச்சிக்காகத் தீவிரமாக ஈடுபடலானார். பிடியரிசித்திட்டத்தினை விரிவுபடுத்தினார். நிதி சேர்ப்பில் மிகுந்த ஆர்வங்காட்டினார்.

தினசரி ஆலயப் பூசைகள் உரிய நேரத்தில் நடைபெறவதற்கு வேண்டிய ஒழுங்களை கோவில் பூசகருடன் இணைந்து திட்டம் வகுத்துச்செயற்படுத்தினார்.

சபையின் கண்காணிப்பில் தினசரி பூசைகளும், சிறப்புவிழாக்களும், அலங்காரத்திருவிழாக்களும் சீராகவும், சிறப்பாகவும் நடைபெறலாயின.

ஆண்டு தோறும் புதிய அறங்காவற்சபை தேர்ந்தெடுக்கும் வழமையும். நடைமுறைக்கு வரலாயிற்று.

# 1964 இல் இருந்து ஆலய வளர்ச்சியில் ஓர் மறுமலர்ச்சி

முதுமையின் காரணமாக, சுப்பிரமணியம் ஐயா வீட்டிலேயே இருந்துவிட்டார். இவருடன் நெருங்கிய தொடர்புடையவராக இருந்தார்.அமரர் திரு.**நா. இராமச்சந்திரன்** அவர்கள். பள்ளம்புலம் முருகன் மீது ஆழமான பற்றும், நம்பிக்கையும் கொண்ட ஒருவராக இருந்தார். அவர் எண்ணியதை எண்ணியாங்கு முருகன் திருவருளால் பெற்றமையே, அப்பற்றுக்கும் நம்பிக்கைக்கும் கருப்பொருளாக அமைந்துவிட்டது. அதனைத் தொடர்ந்து ஆலய வளர்ச்சியில் ஆர்வத்துடன் ஈடுபடலானார். ஆலய வளர்ச்சிக்கு ஓர் உந்து சக்தியாகவே மாறினார் என்று கூறுவதில் மிகையில்லை.

ஆரம்பகாலத்தில் திருவெம்பாப்பூசையினை விரிவான முறையில் நடத்தத் தலைப்பட்டார்.

திருவெம்பாப் பூசைக்காலத்தில் குழுக்கள் அமைத்து, திருவெம்பாவைப் பாடல்களை ஆலயச்சுற்றாடலில் பாடி வருவதற்கான ஓழுங்குகள் செய்யப்பட்டன.

இந் நன்முயற்சி ஊரவர்களிடையே ஈர்ப்புச்சக்தியினையும், உற்சாகத்தினையும், ஆன்மீக எழுச்சியினையும் உண்டாக்கியது. ஆலயத்தினை நோக்கி பக்தர்கள் திரண்டு வந்து தரிசிக்கும் நிலையினை உண்டாக்கியது.

ஆலயத்தின் வளர்ச்சியில் இராமச்சந்திரன் அவர்கள் ஈடுபாடு அதிகரிக்கலாயிற்று. ஆலயத்தினை முழுமையாகப் புணருத்தாரணம் செய்ய வேண்டுமென்ற ஓர் திருவருட்சக்தி அவரைத்தூண்ட வைத்ததெனலாம்.

ஆலயத்திருப்பணிகளைப் படிப்படியாக ஆரம்பிக்கலானார். அறங்காவற் சபையின் ஒத்துழைப்பினையும் தனிப்பட்டவர்களின் உதவிகளையும் பெற்றுத் திருப்பணிகளைத் தொடர்ந்தார்.

மற்றவர்களின் போற்றுதல்களையோ தூற்றுதல்களையோ பாராது ''என் கடன் பணி செய்து கிடப்பதே''என்ற உறுதியான உயர்ந்த நோக்கோடு திருப்பணிகளைச் செயற்படுத்தினார்.

முருகன் அருளும், பன்முகப்படுத்தப்பட்ட முயற்சியும் ஆலயத்திருப்பணிகளில் பெரும் வளர்ச்சியினை உண்டாக்கின.

இவரின் பெருமுயற்சிக்கு உறுதுணையாக அறங்காவற் சபையினரும் பேராதரவு நல்கி வரலாயினர்.

***திருவாளர்கள்:*** தபாலதிபர் வே. பரமலிங்கம் பொறியியலாளர் ச.கு. சிவானந்தன், டாக்டர் சு. பாலசுப்பிரமணியம், ஐ. பொன்னையா ஆசிரியர், நா. நடராசா ஆசிரியர், நொத்தாரிஸ் ம.க.சுப்பிரமணியம், நா. மகாலிங்கம், மு. சின்னத்துரை, த.அருணகிரிநாதன் ஆசிரியர், ச. மகாலிங்கம் ஆசிரியர் சபையில் இடம் பெற்றிருந்தனர்.

திருப்பணிக்கு வேண்டிய நிதி சேகரித்தல், திட்டமிட்டுக் கொடுத்தல், ஆலோசனை வழங்கல், திருப்பணிகள் சிலவற்றை தம் பொறுப்பில் ஏற்று நிறைவேற்றிக் கொடுத்தமை போன்ற பல்வேறு உதவிகளை சபையினர் ஒற்றுமையுணர்வுடன் ஆற்றிவந்தனர் என்பது குறிப்பிடத்தகுந்தது.

## ***திருப்பணி நிறைவேற்றமும் கும்பாபிஷேகமும்:***

கர்ப்பக்கிரகம் (மூல ஸ்தானம்), சுத்தாக்கரம், மகாமண்டபம், தப்பமண்டபம், சந்தமண்டபம், வசந்த மண்டபம், முன்மண்டபம் என்பன சிறப்புறப்பூர்த்தியாக்கப்பட்டன.

பிள்ளையார் ஆலயம், ஆறுமுகசுவாமி ஆலயம், முத்துக்குமார சுவாமி ஆலயம், வைரவர் ஆலயம், யாகமண்டபம், மணிக்கூட்டுக் கோபுரம் என்பன தனிப்பட்டவர்களின் பூரண பங்களிப்புடன் நிர்மாணித்து நிறைவேற்றப்பட்டன.

ஏறக்குறைய, பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வந்த திருப்பணிகள் நிறைவுக்கு வந்தன. அதனைத்தொடர்ந்து கும்பாபிஷேகத்தினை நிறைவேற்றி வைப்பதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

19 ஆம் திகதி. ஆனி மாதம் - 1978 ஆம் ஆண்டில் (19.06.1978) முருகன் பேரருளால் கும்பாபிஷேம் நிறைவேறியது.

பள்ளம்புல முருகன் புதுப்பொலிவு பெற்றார். அன்பர்கள், அடியார்களின் உள்ளங்களில் நிலை கொண்டார். அருளமுதம் தரலானார்.

ஆலய நிகழ்வுகள் அனைத்தும் சிறப்பாகவும், ஒழுங்கமைவாகவும், அறங்காவற்சபையினரால், நிர்வகிக்கப்பட்டு வரலாயின.

இந்நிலையில் ஆலய நிர்வாக ஒழுங்கினை மேலும் சிறப்பாக நெறிப்படுத்தும் நோக்குடன் ஓர் அமைப்பு விதியினை (யாப்பு) உருவாக்குவதற்காக அறங்காவற் சபையினர் ஓர்

**உபகுழுவினை** நியமித்தனர். அதில் **திருவாளர்கள்:** நா. நாகநாதி, ச. மகாலிங்கம், தி. சிவசாமி, பொ. பேரின்பநாயகம் வி. சேதுகாவலர் ஆகியோர் இடம் பெற்றனர்.

இவர்கள் மேற்கொண்ட முயற்சியின் காரணமாக ''அமைப்பு விதி '' (யாப்பு) ஒன்று உருவாக்கப்பட்டு, பொதுச் சபையினரின் அங்கிகாரம் பெற்று 10.07.1978 இல் நடைமுறைக்கு வரலாயிற்று.

**மகோற்சவ விழாவும் தேரோட்டமும் :** 1988 ஆம் ஆண்டு பள்ளம்புலம் முருகன் ஆலயத்திற்கோர் மகத்தான ஆண்டு. ஆலய வரலாற்றில் உன்னதமான சிறப்பு நிகழ்வொன்று பதிவு பெற்ற ஆண்டு. அடியார்கள், தொண்டர்கள், அறங்காவற் சபையினர் ஆகியோரின் ஆர்வமும் அருள்வேட்கையும் ஒன்றிணைந்து அலங்காரத் திருவிழாவினை **மகோற்சவத்திருவிழாவாக** மலர வைத்த ஆண்டு.

20.06.1988 அன்று பள்ளம்புலம் முருகன் ஆலயத்தில் முதன்முதலாக கொடியேற்று விழா பக்தி பூர்வமாக ஆரம்பமாகியது. கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து ஒவ்வொரு திருவிழாவும், பக்தி பூர்வமாக நடைபெறலாயிற்று.

ஒன்பதாவது நாள் - 28.06.1988 அன்று முருகன் தேரில் பவனி வரலானார், இந்நாள் பள்ளம்புலத்துக்கோர் மங்களகரமான, தெய்வீக அருள் பூத்த, நன்னாளாகும். பல நூற்றுக்கணக்கான பக்தர்கள், அடியார்கள் ஆனந்த வெள்ளத்தில் திளைத்த நாளாகும். ஆணவத்தினை நீக்கி ஆன்மாக்களுக்கு அருள்பாலிக்க முருகன் தேரிற் பவனி வந்த திருநாளாகும். சரவணை - பள்ளம்புலத்திற்கு மட்டுமன்றி தீவகம் அனைத்திற்குமே ஓர் வரலாற்று நிகழ்வாகப்பதியப்பட்ட தெய்வத்திருநாளாகும்.

**அடுத்து:** முருகன் ஆலயத்தில் கந்தசஷ்டி விழா, ஓர் தொன்மை வாய்ந்த முதன்மை விழாவாக ஆண்டுதோறும், நடைபெற்று வருகின்றமையை நாமறிவோம்.

தேரோடிய ஆண்டே இவ்விழாவும் மிகச்சிறப்பாக நடைபெற்று 15.11.1988 இல் ''சூரசங்காரமும் அதாவது ''சூரன்போரும்'' நிகழ்ந்தமை ஓர் ஆலயவரலாற்று அம்சமாகும்.

ஆலயத்தின் வியத்தகு இவ்வளர்ச்சி அனைவரையும் ஆனந்தத்தில் ஆழ்த்தியது. அருட்பொலிவு பெற்ற ஆலயமாக அனைவரின் உள்ளங்களிலும் நிலை கொள்ளலாயிற்று.

ஆலயத்தினுடைய இவ்வளர்ச்சிக்கு, மறுமலர்ச்சிக்கு ஓர் உந்து சக்தியாக இருந்து வந்தவர் திரு. நா. இராமச்சந்திரன்.

பல ஆண்டுகளாக தன்னை பள்ளம்புலத்து முருகனின்

சேவைக்காக அர்ப்பணித்து, திருத்தொண்டுகள் பலபுரிந்து, ஆலயத்தினை முழுமையாக வடிவமைத்துத்தந்த பெருமை அவருக்கே பெரிதும் உண்டென்று கூறுவதில் மிகையில்லை.

மகோற்சவவிழா - தேரோட்டம்,கந்தசஷ்டி விழா - சூரன்போர், இந்நிலைக்கு வளர்த்துவிட்ட பெருமை இராமசந்திரன் அவர்களுக்கே பெரிதும் உண்டு.

இவர் ஆலயத்திற்கு ஆற்றிவந்த மகத்தான இறைபணி காரணமாக ஆலயத்தேர்த் திருவிழாத்தினத்தன்று அன்னாருக்கு நல்லைஆதீனக் குருமணியினால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டதுடன் "**சண்முகானந்த சரியைமணி** " என்னும் பட்டமும் வழங்கப்பட்டது.

பள்ளம் புலத்து முருகனுக்கு ஓர் சித்திரத்தேர் அமைக்கவேண்டும் என்றவோர் பெருவிருப்புக்கொண்டவராகவும் இருந்தார். இறுதி காலத்திலும் அந்நோக்கத்தினை வற்புறுத்தி வாழ்ந்தார்.தன்னகத்தே பிறந்த வழி ஒன்றினையும் சுட்டிக்காட்டிச்சென்றுள்ளார்.

முருகன் திருவடிகளை மறவாத, ஆலயவளர்ச்சியினை அகத்திற்கொண்ட இறைபக்தர்களை நாம் என்றும் நினைவு கூர்வோமாக!

மேலும் 1960 களில் இருந்து அறங்காவற்சபையின் செயற்பாடுகள் வளர்ச்சி பெற்றுவரலாயிற்று. அவ்வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து அரிய சேவையினை ஆற்றியபின், அமரத்துவம் அடைந்தவர்கள்:

**திருவாளர்கள்:** ஐ. பொன்னையர் உபாத்தியாயர், தி.சிவசாமி ஆசிரியர், மு.சின்னத்துரை ம.க.நடராசா, க.கந்தையா, ச. இராசரெத்தினம், ப. சின்னத்துரை ஆகியோராவார்.

அன்று தொடக்கம் ஆலயவளர்ச்சியில் ஆர்வமும், ஈடுபாடும் கொண்டுவருபவர்கள்.

**திருவாளர்கள்:** சி.வரதலிங்கம், த.சிலம்பின்செல்வன், க.இரவீந்திரன், தி. திருஞானசம்பந்தமூர்த்தி, ஜெ. ஜெகநாதன், ப. தேவன், தி. சிவபாலன், த. சங்கரலிங்கம், சு. செல்வரெத்தினம், இ.பரநிருபசிங்கம், மனோகரதாசன் (தேவன்), மு.குமாரசாமி ஆகியோராவார்.

முருகன் அடியார்கள் அனைவருமே பள்ளம்புலத்து முருகன் ஆலய வளர்ச்சியில் ஒவ்வோர் படிக்கல்லாக அமைந்திருப்பார்கள் என்பது உள்ளார்ந்த ஆன்மீக உண்மைமுடிவாகும்.

# சரவணை – பள்ளம்புலம் ஸ்ரீ முருகன் கூட்டுப்பிரார்த்தனைச்சபை:

1965 ஆம் ஆண்டில் ஓர் ஆன்மீக எழுச்சி இயக்கமாக சரவணை - பள்ளம்புலம் ஸ்ரீ முருகன் கூட்டுப் பிராத்தனைச்சபை உதயமாகியது.

பதினெட்டு வயதிற்கு உட்பட்ட இளைஞர்கள், யுவதிகள் இருபாலாரும் இச்சபையின் உறுப்பினராகும் உரிமை உண்டு.

இச் சபைக்குரிய ''**யாப்பு**''ஒன்றும் ''**வேல்**''இலச்சினை பொறிக்கப்பட்ட மஞ்சள் நிறக்கொடி யொன்றும் ஆக்கப்பட்டன.

சிறுவர்களின் உள்ளங்களில் சமய அறிவு, இறைபக்தி, ஆன்மீக விழிப்புணர்ச்சி என்பவற்றை வளர்த்தெடுப்பதே இச்சபையின் நோக்கமாகும்.

வெள்ளிக்கிழமை தோறும் ஆலயத்தில் கூட்டுப்பிரார்த்தனை நடாத்தல், ஒவ்வொரு வருடமும் குறிப்பிட்ட தேதியில் பேச்சு, எழுத்துப்போட்டிகளை நடாத்துதல், திருமுறை மனனப்போட்டிகள் நடாத்திப் பரிசுகள் வழங்கல், சமயப்பெரியார்களின் கருத்துரைகளைக் கேட்பதற்குரிய ஒழுங்குகள் செய்தல், ஆலய வளர்ச்சிக்கு வேண்டிய ஆக்கபூர்வமான பணிகளுக்கு உதவுதல் என்பன சபையின் செயற்பாடுகளாகும்.

மேலே கூறப்பட்டவற்றைச்சபை திறம்பட நடைமுறைப்படுத்தி வரலாயிற்று. இச்சபையின் உறுப்பினர்களாக, இளைஞர்கள், யுவதிகள் அங்கம் வகித்து வந்தனர். அவர்களில்;

**இளைஞர் வரிசையில்:**

| | |
|---|---|
| பொ.பேரின்பநாயகம், | சி.குணரெத்தினம் |
| வே.சிங்கராசா. | சி.மகேஸ்வரமூர்த்தி |
| செ.கந்தசாமி, | பொ.கணகநாயம், |
| வே.இராசலிங்கம், | இ.பரநிருபசிங்கம், |
| சி.சிவநாதன், | நா.பரமானந்தசிவம், |
| ப.தேவநாதன், | ப.குணநாதன், |
| தி.ஸ்ரீகந்தராசா, | சி.ஸ்ரீநாதன், |
| சு.கேதீஸ்வரன், | தி.சிவபாலன், |

| | |
|---|---|
| ம.மதியழகன், | செ.தருமராசா, |
| செ.தேவன், | வே.சிவசுப்பிரமணியம், ச.குகன், |
| ம.அன்பழகன், | ச.விமலநாதன், |
| ச.கண்ணன், | ஜெ.குகதாசன், |
| சி.குணரெத்தினம், | கு.ஜெயகுமார், |
| ஜெ.ஜெகநாதன், | த.ரகுநாதன், |
| த. கிருபாகரன், | த.தயாபரன். |
| த.லோகநாதன் | ச.சோதிலிங்கம் |
| கோ.பிரகஸ்பதி | கு.புலவன் |
| கு.நிமலன் | சி.தயாபரன் |
| சி.கிருபாகரன் | |

***யுவதிகள் வரிசையில்:***

| | |
|---|---|
| ந.சரோஜினி | ந.மலர்மகள் |
| ந.கலைமகள் | ந.யோகநாயகி |
| ந.விஜயலெட்சுமி | த.மலர்விழி |
| த.கயல்விழி | க.சோதிநாயகி |
| ஜெ.ஜெயலட்சுமி | ம.ஜெயந்தி |
| ம.வசந்தி | ம.சுதந்தி |
| த.ரமணி | த.வனிதா |
| கு.ஜெயகௌரி | கு.கேதீஸ்வரி |
| ந.மகாமணி | ந.ராதாமணி |
| ந.சிவமணி | ந.லலிதாமணி |
| கு.வாணி | வே.ஞானசௌந்தரி |
| ச.தில்லைச்சொரூபி | கு.சசி |
| செ.றாகினி | த.கவிதா |
| த.ஜெகதா | த.நந்தா |
| ந.திருமகள் | |

ஆகியோர் இடம் பெற்றிருந்தனர், இச்சபையின் காவலராக (போஷார்) திரு.ச.மகாலிங்கம் ஆசிரியர் நியமிக்கப்பட்டார். இவர் தொடர்ந்து சபையினை நெறிப்படுத்தி வரலானார்.

இச்சபை ஆலயத்தில் நடைபெற்று வந்த திருப்பணிகளுக்கு பல்வேறுபட்ட ஆக்க பூர்வமான உதவிகளைச்செய்து வந்தது. மேலும் ஆலய நிர்வாகக் கட்டுக்கோப்பிற்காகவும், நிர்வாக வளர்ச்சிக்காகவும், ஆலயத்தின் உள்ளகவளர்ச்சிக்காகவும்

பின்வரும் இரு பிரதான அம்சங்களை நிறைவேற்றி வைக்க உதவியது. அவை:-

அ) அறிஞர் பெருமக்களின் பங்களிப்புடன் அறங்காவற் சபைக்கென ''அமைப்புவிதி'' (யாப்பு) ஒன்றினை வடிவமைத்து நிறைவேற்ற உதவியமை.

ஆ) பூசகர்வேதனம் தடைப்படாது மாதாந்தம் கொடுத்து வருவதற்கான ''பூசை நிதியம்''ஒன்றினை ஆரம்பித்து வைக்க உதவியமை.

இச்சபையின் வளர்ச்சிக்காகக் கொழும்பு விவேகானந்த சபையும் ஊக்கமும்,உதவியும் அளித்து வந்ததுடன் ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் காலத்துக்குகாலம் வழங்கி வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

கூட்டுப்பிரார்த்தனைச்சபையின் வளர்ச்சிக்காக அரிய, பெரிய சேவைகளை அதன் உறுப்பினர்கள் ஆற்றி வரலாயினர். அனைவரும் ஒன்றிணைந்து ஒற்றுமை உணர்ச்சியுடன் அதன் வளர்ச்சிக்காகச் சேவையாற்றினர்.

இந்நிலையில், சபை உறுப்பினர்களில் ஒருவரான அமரர் வே. சிவசுப்பிரமணியம் அவர்களைப்பற்றியும் சிந்திக்கவேண்டிய கடமைப்பாடுடையவர்களாக இருக்கின்றோம். சபையின் ஆரம்பஉறுப்பினர்களில் ஒருவராக இருந்தார். இவர் அன்பும், பண்பும், அடக்கமும்,அறிவும், கொண்ட ஓர் திறமையான இளைஞராவார். கூட்டுப்பிரார்த்தனைச்சபையின முதன்மை உறுப்பினர்களில் ஒருவராகவும், கடமைவீரராகவும்.இருந்து வந்தார். தான் பொறுப்பேற்கும் பணிகளைத்திறம்பட நிறைவேற்றி வைக்கும், ஆற்றலுடையவராகவும் திகழ்ந்தார். எல்லோராலும் மதிக்கப்பட்ட இவ்விளைஞரை எம்முடன் வாழவிடாமல், தம்முடன் முருகன் ஏற்றுக் கொண்டார் போலும்.

இச்சபையின் செயற்பாடுகளினால், இளைஞர்கள், யுவதிகள் ஆகியோர் சமய அறிவினையும், இறையுணர்வினையும், ஆன்மீக விழுமியங்களையும் பெற்றுத்தம்மை வளம்படுத்திக்கொள்ளும் வாய்ப்புக்கள் ஏற்படலாயிற்று.

''இளமையிற்கல்வி சிலையில் எழுத்து'' என்பதற்கமைய,

அந்நற்பண்புகள் யாவும். இளம் உள்ளங்களில் உறுதியாக நிலைகொள்ளலாயிற்று. அவர்களின் எதிர்கால வளமான வாழ்விற்கு அவையாவும் உந்துசக்திகளாக அமைந்துவிட்டன. இதனால் அவர்கள் ஒவ்வொருவரின் தனிப்பட்ட வாழ்வும், இல்லறவாழ்வும், சமுதாயவாழ்வும்,சீரும்சிறப்புமாகவும் அமைந்துள்ளதை நாம் இன்று காணக்கூடியதாகவுள்ளது.

இவர்கள் ஆலயத்தின் மீது மிகுந்த பற்றுடையவர்களாக இருக்கின்றார்கள். ஆலயப்பணிகளில், நிர்வாகத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்களாக இருக்கின்றார்கள். உண்ணாட்டிலோ, வெளிநாடுகளிலோ வாழ்கின்ற இவர்கள் ஆலய வளர்ச்சிக்காக, மேம்பாட்டிக்காக தாராளமான பொருளுதவி, நிதியுதவிகளை வழங்கி வருகின்றார்கள் என்பதில் பெருமையடை வேண்டும்.

ஆலயத்துடன் இணைந்து இயக்கிவரும் ஓர் சமய நிறுவனம், இயக்கம் இளஞ்சமுதாயத்துக்கிடையே சிறந்த, வளமான ஆன்மீகப்பண்பினை, வாழ்வினை உருவாக்கித்தரும் என்பதற்கு ''சரவணை - பள்ளம்புலம் ஸ்ரீ முருகன் கூட்டுப்பிரார்த்தனைச்சபை'' ஓர் நல்ல சான்றாக அமைந்துள்ளதென்பதில் நாம் பெருமையடையலாம்.

1990 அளவில் ஏற்பட்ட போர் அனர்த்தம் காரணமாகவும், மக்களின் இடம் பெயர்வு காரணமாகவும் ''சபை''வளர்ச்சியில் தடைகள் ஏற்பட்டுள்ளன. இந்நிலை இன்றும் தொடர்கின்றது. இளஞ்சந்ததியினரின் ஈடுபாடு மிகக்குறைவாகவே இருந்து வருகின்றது. எனினும் எதிர்காலத்தில் இச்சபை ஆக்கபூர்வமான முறையிற் செயற்பட்டு வருங்கால இளைய சந்ததியினரின் உடல், உள, ஆன்மீக வளர்ச்சிக்கு வழிவகுக்குமென எதிர்பார்ப்போமாக!

## ஆலயப்பூசையில் அந்தணர் வரிசை

ஆலயத்தின் ஆரம்பத்தோற்றுவாய் பற்றியும், அதன்வளர்ச்சி பற்றியும், ஆலயத்திற்காக அன்றும், இன்றும் அரும்பணிகளை ஆற்றிய பெருமக்கள் பற்றியும் அறிந்தோம். ஆனால் ஆலயத்தின் உயிரோட்டமாக இருந்து ஆலயத்தினை இயக்கி வளர்ச்சிப் பாதையில் இட்டுச்சென்ற, செல்கின்ற அந்தணர் பெருமக்கள் பற்றியும் அறிந்து கொள்ளவேண்டிய கடமைப்பாடுடையவர்களாக இருக்கின்றோம்.

ஆகம விதிப்படி ஆலயம் அமைக்கப்பட்ட பின்பு முதன் முதலாக அங்கு பூசையினை ஆரம்பித்து வைத்த அந்தணர் விபரம் பற்றி எமக்கு இதுவரை எதுவும் தெரியவில்லை. அறிந்து கொள்ள எடுத்த முயற்சியும் பயனளிக்கவில்லை

ஓர் குறிப்பிட்ட கால எல்லையில், பணியாற்றிய அந்தணர் வரிசையில் சிவஸ்ரீநாகலிங்கம் ஐயா அவர்களை முதலிற்குறிப்பிடலாம்.

அமைதியும், அடக்கமும், கனிந்தபண்பும், இனியபேச்சும் உடையவராக நாகலிங்கம் ஐயா அவர்கள் இருப்பார். முதுமை அடைந்த காலப்பகுதியில் தான் முருகமூர்த்தி கோவில் பூசையினை பொறுப்பேற்று நடத்தி வந்தார். என்பது எமது அறிவுக்கெட்டிய முடிவாகும்.

ஒற்றை மாட்டுவண்டியிற்றான் கோவிலுக்கு வருவார். தினசரிப்பூசைகளையோ, விழாக்களையோ அமைதியாக ஆகமவிதிகளுக்குகமைய பயபக்தியுடன் நிறைவேற்றி வைக்கும் இயல்புடையவராக இருந்தார். ஆலயதரிசனம் செய்ய வருவோர் அவரை ''நாகலிங்கம் ஐயா'' என்று அன்புடன் அகம் நெகிழ அழைப்பதில் தனியின்பம் காண்பர்.

நாகலிங்கம் ஐயர் அவர்களை அடுத்து கோவிற் பூசையினை சிவஸ்ரீ கணபதிக்குருக்கள் பொறுப்பேற்றார்.

இவரின் இல்லம் மயிலப்புலம் ஐயனார் ஆலயத்திற்கு அருகாமையில் இருந்தது ஐயனார் ஆலய நிரந்தரப்பூசகராகவும் இருந்து வந்தார்.

மிகவும் கட்டுப்பாடுடையவர், கண்டிப்பான போக்குடையவர், ஆனால் பணிவும், பண்பும் உரிய நேரங்களில் வெளிப்படுவதைக் காணலாம். தனது பணிக்காக எங்கு சென்றாலும் கால் நடையாகவே போய்வருவார்.

ஆலயப்பணிகளைச் செய்து நிறைவேற்றுவதில் மிகுந்த ஆர்வங்காட்டுவதோடு, விதிப்படி அவற்றினைச்செய்தும் நிறைவேற்றுவார்.

ஊர்மக்கள் அவரைக் கணபதி ஐயர் என்று கூறுவதைவிட ''ஐயனார் கோவில் ஐயர்'' என்று அழைப்பதில் ஓர் தனி மகிழ்ச்சி, இன்பம் காண்பார்கள்.

இவருடைய மக்கள், மருமக்கள் ஆகியோரும் கோவிற்பூசையினை மிகுந்த ஈடுபாட்டுடன் நடாத்தி வந்தனர்.

கணபதி ஐயரை அடுத்து, சிவஸ்ரீநா. சோமசுந்தரக் குருக்கள், ஆலயப்பொறுப்பினை ஏற்றுக்கொண்டார். இவர் சிவஸ்ரீ நாகலிங்கம் ஐயர் அவர்களின் மகனாகும் 'பயபக்தியும், இனிய சுபாமும் கொண்ட ஒருவர். கிராமமக்களுடனும், அறங்காவற் சபையுடனும் அன்புடன் நடந்து கொள்வதோடு, அவர்களுடைய கருத்துக்களையும் கேட்டு, ஆலயப்பணிகளைச்சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தி வரலானார்.

## அரும்பணி ஆற்றிவரும் சிவஸ்ரீ நா.யோகேஸ்வரக்குருக்கள்

பள்ளம்புலம் முருகமூர்த்தி கோவிலில் நாகலிங்கம் ஐயரின் பரம்பரையினரே அதிக ஈடுபாடு கொண்டிருந்தனர் என்பது வெளிப்படை. இந்நிலையில் எமது பெருமதிப்பிற்குரிய சிவஸ்ரீ யோகேஸ்வரக்குருக்களும் ஆலயப்பொறுப்பினை ஏற்றுக் கொண்டார்.

ஏறக்குறைய நான்கு சகாப்த காலத்துக்கு மேலாக ஆலயப்பணியினை அவரும், அவரின் மக்களும், மருமகனும் ஒன்றிணைந்து ஆற்றிவருகின்றனர்.

அறங்காவற் சபையினரால் ஆலயத்துக்கருகாமையில் அமைத்தளித்த இல்லத்திலிருந்தே ஆலயப்பூசை நியமங்களை செம்மையாகச் செயற்படுத்தி வரலானார்.

வடமொழியிலும், தமிழிலும் வளமான அறிவினைப் பெற்றவர். வேதாகமங்களைச் சிறப்புறக்கற்றுக்குரு பட்டம் பெற்றவர். குருத்துவத்தில் பல்லாண்டு அனுபமுதிர்ச்சி பெற்ற ஓர் அந்தணப்பெருந்தகையாக இன்று வாழ்ந்து வருகின்றார்.

அன்பு, அடக்கம், பொறையும் உடையவர். அவர் ஆலயப்பூசைப்பொறுப்பினை ஏற்ற காலத்திலிருந்து இன்றுள்ள நிலைமைவரை நோக்கினால் ஓர் பேருண்மையினை நாம் உணர்ந்து கொள்ளமுடியும்.

அவரின் ஆலயப்பூசையும், ஆசீர்வாதமுமே இன்றைய ஆலயத்தின் வளர்ச்சிக்கு ஓர் உயிரோட்டமாக அமைந்துள்ள

தெனலாம். அவர் அறங்காவற் சபையினர் அனைவரையும் அவரவருக்கு ஏற்றமுறையில் நடத்தி சாந்தப்படுத்தி, சமாதானப்படுத்தி, நெறிப்படுத்திக்கொள்ளும் பெருந்தன்மை அவரிடமுண்டு.

எத்தனையோ சவால்களையும், சோதனை களையும், பிரச்சனைகளையும் கண்ட ''யோகர் ஐயா'' அவர்கள், அவை அனைத்தையும் தனது சமூகவிவேகத்தினால் சமாளித்து ஆலய முன்னேற்றத்தின் முனைப்பினை மழுங்கவிடாது பாதுகாத்து வந்தவராகும்.

அவரும், அவர் குடும்பமும் ஆலயப்பூசைப் பொறுப்பினைத் தொடர்ந்து நடாத்தி வருவது எமக்கெல்லோருக்கும் ஓர் பெரும் பேறாகவே கருதவேண்டும்.

மீண்டும், ஆலய இல்லத்தினில் இருந்து, பள்ளம்புலம் முருகனுக்குப்பணிபுரியும் காலத்தினை எதிர்பார்ப்போமாக!

# கோவிற்காணிகள்

பள்ளம்புலம் முருகனின் ஆலய பரிபாலனத்திற்காகவும், வளர்ச்சிக்காகவும், அன்று வாழ்ந்த பெருமக்கள் அறக்கொடைகளாகக் காணிகளை வழங்கினார்கள். ஏறக்குறைய இருநூற்றைம்பது பரப்புக்காணிகளும்,தோட்டங்களும் ஆலயத்தின் சொத்தாக இன்றுள்ளன.

இக்காணிகள் மூன்று வருடங்களுக்கு ஒரு முறை குத்தகைக்குக்கொடுத்து பெறும் வருவாயினை ஆலயபூசைக்கும், அதன் பராமரிப்புக்கும் காலாகாலமாக பயன்படுத்தி வந்தனர். ஆனால் காலச்சூழற்சியின் காரணமாக குத்தகைப்பணம்மட்டும். ஆலயத்தேவைகளுக்குப் போதியதாக இருக்கவில்லை. இதனால் குத்தகைப்பணத்துடன் வேறு வழிமுறைகளையும் கையாண்டு ஆலய நிர்வாகத்தினை நடாத்தி வந்தனர்.

**காணி நிர்வாகப்பிரச்சினைகள்:**

காலப்போக்கில் காணிகளைப் பாதுகாப்பதிலும், நிர்வகிப்பதிலும் அறங்காவற் சபையினருக்கு சிரமங்கள் சில ஏற்படலாயிற்று.

எல்லைத்தகராறுகள், காணிகளுக் கூடாகப்பாதை அமைத்தல், ஒரு சில சந்தர்ப்பங்களில், காணிக்கு உரிமை கோரியமை போன்ற பிரச்சனைகள் ஏற்படலாயின. அவற்றைத்தீர்த்து வைப்பதிலும் சிரமங்கள் ஏற்பட்டன.

ஒரு சில சந்தர்ப்பங்களில் நடுநிலைமையாளரையும் மீறி நீதி மன்றம் செல்லவேண்டிய நிலைமையும் ஏற்பட்டது.

காணிக்கு உரிமை கோரிய அத்தகைய ஓர் சந்தர்ப்பத்தில்; அமரர்.ம.க.சுப்பிரமணியம் நொத்தாரிசின் பெருமுயற்சியாலும், அறங்காவற்சபையின் விடாமுயற்சியாலும் நீதிமன்றத்தீர்ப்பு சாதகமாக அமைந்தது. காணியும் கோவிலுக்கு உரித்தாயிற்று.

## 1990 ஆம் ஆண்டு தொடக்கம் காணிகளின் நிலைப்பாடு:

இக்காலத்தில் போர் தொடங்கி தீவிரம் அடைந்தது. மக்கள் புலம் பெயர்ந்தனர். ஆலயத்தின் மீதோ, ஆலயச்சொத்துக்கள் மீதோ ஆர்வம் கொள்ளுமளவுக்கு மக்கள் மனோநிலை இருக்கவில்லை. அதனால் ஆலயக்காணிகள் அனைத்தும் பயன்பாடற்று, பராமரிப்பற்றுப்போயின. அவற்றின் எல்லைகளாகவுள்ள "**வரம்புகள்**" யாவும் கரைந்து சிதைந்துப்போயின. இன்று காணிகளின் எல்லைகளை அடையாளப்படுத்த முடியாத நிலையில் உள்ளன.

மேலும், கோயிற்காணிகள் அறிந்துள்ள ஊர்ப்பெரியார்களும், முதியோர்களும் இடம் பெயர்ந்து சென்றுவிட்டனர், பலர் இயற்கையெய்தியும் விட்டனர்,இதன் காரணமாக கோவிற்காணிகளை அடையாளப்படுத்திக் காட்டுவதில் ஓர் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

போரின் தாக்கத்தினால் இன்றுள்ள இளைஞர்களுக்கோ ஆலயத்துக்கருகாமையில் இருப்பர்களுக்கோ காணிகளின் விபரங்கள் தெரியாத ஓர் நிலையும் ஏற்பட்டுள்ளது.

எனவே இந்நிலைமை எதிர்காலத்தில் ஏற்படாமல் தவிர்த்துக்கொள்வதற்கு காணிகளின் விபரங்களைத்திரட்டி தெளிவான முறையில்பட்டியல் இட்டு அறங்காவற்சபையினால் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

# சரவணை– பள்ளம்புலம் அருள்மிகு முருகமூர்த்தி திருக்கோவிலின் ஆதன அட்டவணை.

**01."கோவில் வீதி "**

"கோவிலின் 04 சுற்றுப்புற வீதிகளும். பின் வீதிக்கு மேற்குப்புறமாக உள்ள ஆதனமும்'' இதன் பரப்புத் தொகை குறிப்பிடப்படவில்லை.வீதிகள் எனும் பேராகவே இருக்கின்றது.

**02.''பள்ளம்புலம் வடக்கு''**

இவ்வாதனம் கோவிலின் வடக்குப்பக்கம் அதாவது வடக்குப்புற தெருவிற்கு வடக்குப்பக்கமாகவுள்ள நீண்டு போய் பின் சதுரவடிவில் அகன்றுள்ள ஆதனம்.

இதன் பரப்புத் தொகை:-02

03.''**சம்மாந்தறை கிழக்கு**''

இவ்வாதனம் மயிலப்புலம் வீதிக்கு கிழக்குப் பக்கமாக அமைந்துள்ளது

இதன் பரப்புத் தொகை:-30

**04.''சம்மாந்தறை மேற்கு''**

இவ்வாதனம் மயிலப்புலம் வீதிக்கு மேற்குப் பக்கமாக அமைந்துள்ளது.

இதன் பரப்புத் தொகை:-10

05.**தேவறன்**

இவ்வாதனம் ஆத்திசூடி வீதிக்கு மேற்குப் பக்கமாக அமைந்துள்ளது

இதன் பரப்புத் தொகை:-22

06. **மானங் கோறை**

இவ்வாதனம் கோவிலின் வடக்குப்புற றோட்டு கிழக்கு நோக்கிப் போகும் போது. வருகின்ற முதல் வளைவில் அமைந்துள்ளது. அதாவது மயிலப்புல வீதியில் அமைந்துள்ளது.

இதன் பரப்புத் தொகை:-25

07. **மருதடி வயல் தெற்கு:-**

இவ்வாதனம் தெங்கம் குளத்திலிருந்து வரும் வாய்க்காலின் தெற்குப் பக்கமாக அமைந்துள்ளது.

இதன் பரப்புத் தொகை:-30

08. **மருதடி வயல் வடக்கு:-**

இவ்வாதனம் தெங்கம் குளத்திலிருந்து வரும் வாய்க்காலின் வடக்குப் பக்கமாக அமைந்துள்ளது.

இதன் பரப்புத் தொகை:-30

09.**அழகக் கோன் வயல்**

இவ்வாதனத்தின் மேற்க்குப்புறம் தெங்கம் குளத்தையும், வடக்குப்புறம் அக்குளத்திலிருந்து புறப்படும் வாய்க்காலையும் எல்லையாகக் கொண்டு அமைந்துள்ளது.

இதன் பரப்புத் தொகை:-12

10.**முருக்கன் திடல்:-**

இவ்வாதனம் இலந்தைவன சித்திவிநாயகர் ஆலயத்தின் வடக்குப் புறமாக மேற்கு நோக்கி வரும் ஒழுங்கையின் தெற்குப் பக்கமாக அமைந்துள்ளது.

இதன் பரப்புத் தொகை:-40

11. **பெரியவயல்:-**

இவ்வாதனம் தெங்கம் குள வாய்க்காலின் மேற்குப் பக்கமாகவும். திருவாளர் க.தியாகராச அவர்களின் காணிக்கு அருகாமையிலும் உள்ளது. இவ்வாதனம் 3 1/2 பரப்பு சொரியல் எனக்குறிப்பிடப் பட்டதுடன் மேற்க்குறித்த க.தியாகராச அவர்களின் வீட்டிற்கு வடக்குப்புறமாக அமைத்த ஆலய ஆதனமான ஓடப்பாலாவி 04 பரப்பிற்க்குப் பதிலாகப் பெற்றுக்கொண்ட (அவரிடம் இருந்த பெரியவயல் காணியில் இருந்து பெற்றுக் கொண்ட) 04 பரப்பையும் சேர்த்து (3 1/2+04) அமைந்துள்ளது.

இதன் தற்போதய பரப்புத்தொகை:-71/2

12. **மயிலப்புலம் தோட்டம்:-**

இவ்வாதனம் 777 இ.போ.ச வீதியாகிய வடக்கு றோட்டில் மயிலப்புலம் சந்திக்கு கிழக்குப்புறமாக 777 வீதியின் தெற்குப் பக்கமாக அமைந்துள்ளது

இதன் பரப்புத் தொகை:- 05 நெ. பரப்பு 1500 கன்று

13. **பாலாவி:-**

இவ்வாதனம் மயிலப்புலம் வீதியில், வீதிக்கு மேற்குப் பக்கமாக அமைந்துள்ளது

இதன் பரப்புத் தொகை:-27

# 1990 இல் போரும் புலம்பெயர்தலும்

1989 ஆம் ஆண்டு வரை ஆலய நிகழ்வுகள் யாவும் ஒழுங்காகவும், சீரும் சிறப்பாகவும் நடைபெற்று வந்தன. ஆனால் 1990 ஆம் ஆண்டு ஏற்பட்ட போரினால் பல அனர்த்தங்கள் ஏற்படலாயின.

கிராம மக்கள் புலம் பெயர்ந்தனர். கோவில் பூசகர்களும் இடம் பெயர்ந்தனர். ஆலயம் தனிமைப்படுத்தப்பட்டது. தினசரிப்பூசைகளும் நடைபெறமுடியாத நிலை ஏற்பட்டது. சுருங்கக் கூறின் ஆலய நடவடிக்கைகள் அனைத்தும் ஸ்தம்பிதநிலை அடைந்தன. அருளூற்றுவற்றியது. ஆன்மீகவரட்சி ஏற்பட்டது. எங்கு பார்த்தாலும் சோகக்காட்சிதான். இந்நிலை சில ஆண்டுகள் தொடர்ந்தன.

# 1997 ஆம் ஆண்டுக்குப்பின் ஆலயம்

1996 இல் மக்கள் தமது இடங்களில் மீள்குடியேறுவதற்கு அனுமதிக்கப்பட்டனர். இதனால் ஆலயத்திற்கு அண்மையில் வாழ்ந்த பலரும் மீண்டும் வந்து குடியமர்ந்தனர்.

பல குடும்பங்கள் யாழ்ப்பாணம், கொழும்பு, வவுனியா போன்ற பகுதிகளில் நிரந்தர வதிவிடத்தினைத் தேடிக்கொண்டனர். எனினும் பள்ளம்புலம் முருகன் மீது பற்றும் நம்பிக்கையும் கொண்டவர்களாகவே வாழ்ந்து வருகின்றனர். ஆலயத்தின் எதிர்காலம் பற்றியும் சிந்திக்கலாயினர்.

21.05.1997 இல் ஆலயத்தினைப் புணரமைக்கும் நோக்கத்துடன் தற்காலிகச் செயற்குழுவொன்று தெரிவு செய்யப்பட்டது. அதில் பின்வருவோர் இடம்பெற்றனர்:-

| | |
|---|---|
| தலைவர் | - திரு.சு. தில்லைநாதன் |
| உப தலைவர் | - திரு.க. இராசலிங்கம் |
| செயலாளார் | - திரு.ப. தேவநாதன் |
| உப செயலாளர் | - திரு.கு. ஜெகதீஸ்வரன் |
| பொருளாளர் | - திரு.த. அருணகிரிநாதன் |

**உறுப்பினர்கள்**

திரு. பொ.சிவலிங்கம்
திரு. வே.இராசரெத்தினம்
திரு. ப.ஞானபண்டிதன்
திரு. தி.ஸ்ரீகந்தராசா
திரு. ப.சொர்ணகாந்தன்
திரு. த.ஹிசெல்வம்

**காப்பாளர்கள்**

திரு. நா.சுந்தரம்
திரு. நா.மகாலிங்கம்
திரு. பொ.வெற்றிவேலு

இக்குழு, ஏறக்குறைய இருவருடங்களாகத் தொடர்ந்து தனது சிறந்த பணியின் மூலம் ஆலயத்தினைப் புணருத்தாரணம் செய்தமையோடு, ஆலய நித்திய நைமித்தியப்பூசை ஒழுங்குகளையும் நெறிப்படுத்தி வந்தது.

ஆலயச் சீரமைப்பினைத் தொடர்ந்து, 28.03.1999 இல் கூடிய பொதுக்கூட்டத்தில் நிரந்தரச் செயற்குழுவொன்று தேர்ந் தெடுக்கப்பட்டது. அதில்:-

| | |
|---|---|
| தலைவர் | - திரு.சு. தில்லைநாதன் |
| உப தலைவர் | - திரு.க. இராசலிங்கம் |
| செயலாளார் | - திரு.த. அருணகிரிநாதன் |
| உப செயலாளர் | - திரு.ப. தேவநாதன் |
| பொருளாளர் | - திரு.ப. ஆரூரன் |
| சொத்துடமை அதிகாரி | - திரு.செ.ரஞ்சன் |
| ஆலயபரிபாலகர் | - திரு. பொ.சிவலிங்கம் |

**உறுப்பினர்கள்**

திரு. பொ.வெற்றிவேலு
திரு. சொ.சிவயோகலிங்கம்
திரு. தே.கேதீஸ்வரன்
திரு. ப.சொர்ணகாந்தன்

திரு. க.தவச்செல்வம்
திரு. ச.கைலாசபதி.
திருமதி. கே.செல்வராணி
திருமதி.ஸ்ரீ.மலர்விழி
காப்பாளர்: திரு.நா.மகாலிங்கம்
கணக்குப்பரிசோதகர் - திரு. ப.ஞானபண்டிதன்

ஆகியோர் இடம்பெற்றனர். இச்செயற்குழு ஆலயப்பணிகளை தொடர்ந்து செயற்படுத்தத் தொடங்கியது. மகாகும்பாபிஷேகத்திற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்து நிறைவேற்றியதோடு 07.05.1999 இல் பிரதிஷ்டா கும்பாபிஷேகத்தினையும் சிறப்புறநிறைவு செய்து வைத்தது. அதனைத்தொடர்ந்து மகோற்சவவிழா, சிறப்பு விழாக்கள் அனைத்தும் மீண்டும் தொடர்ந்து நடைபெறலாயின.

கும்பாபிஷேகத்தினைத் தொடர்ந்து, "**மலர்வெளியீடு**"ஒன்றினையும் நிறைவேற்றி வைக்கத் தீர்மானித்திருந்தனர். ஆனால் நாட்டின் அமைதியின்மை காரணமாக அதனை உரியகாலத்தில் செயற்படுத்த முடியவில்லை.

சிறிது காலம் தாழ்த்தி அதாவது 10.10.1999 அன்று யாழ் இந்து ஆரம்ப பாடசாலையில், திரு.பொ. சிவலிங்கம் அவர்களின் தலைமையில் ''கும்பாபிஷேகமலர்'' வெளியீடு சிறப்பான முறையில் நிறைவு செய்யப்பட்டது.

இதனைத்தொடர்ந்து ஆலய வளர்ச்சிக்கான ஆக்க பூர்வமான பணிகளைச்செய்து வரலாயினர். வருடாவருடம் பொதுக்கூட்டமும் அறங்காவலர் தேர்வும் ஒழுங்காக நடைபெறலாயின. தேர்ந்தெடுக்கப்படும் செயற்குழுவும் தமது பணிகளை சிறப்பாகச் செய்து ஆலயத்தினை மேம்படுத்தி வந்தது.

ஆலய வளர்ச்சிக்காக ஆக்கபூர்வமான பணிகளை ஆற்றி வந்தவர்களில் திருவாளர்கள் தி.ஸ்ரீகந்தராசா, சு.மகேந்திரன், ஆரூரன் ஆசிரியர், அருணகிரிநாதன் ஆசிரியர். ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவர்களின் தொடர்ச்சியான முயற்சியினால் எஞ்சியிருந்த திருப்பணிகளான உட்பிரகாரக்கொட்டகை, மடப்பள்ளி,களஞ்சிய அறை, சில அறைகளும் பூர்த்தி செய்யப்பட்டன.

மேலும் ஆறுமுகவாசல், முன்கொட்டகைப்பாதுகாப்பு ''வேலி'' போன்ற பணிகளையும் பூர்த்தி செய்தனர்.

இவற்றையெல்லாம் நிறைவேற்றி வைப்பதற்குரிய பங்களிப்பினையும், பொருளுதவியினையும், நிதி உதவியினையும், வழங்கிய உள்நாட்டும், வெளிநாட்டுப் பெருமக்களுக்கு முருகன் அருள்வழி நின்று நன்றி செலுத்துவோமாக.

இன்று, நாம் ஆலயத்தினுள் பிரவேசிக்கும் பொழுது, பூரண நிறைவு பெற்ற ஓர் ஆலயத்தினைக் காண்கிறோம். தரிசிக்கின்றோம், பூரிப்படைகின்றோம் என்பதில் ஐயமேஇல்லை.

சரவணை பள்ளம்புலம் அருள்மிகு முருகமூர்த்தி திருக்கோவிலை இப்பெருநிலைக்கு இட்டுவந்த அறங்காவற்சபை களின் வரிசையில் இன்று உள்ள சபை உறுப்பினர்கள் (18.02.2007)

***திருவாளர்கள்:***

ப. ஆரூரன் - தலைவர்
சு. மகேந்திரன் - உபதலைவர்
தி. ஸ்ரீ கந்தராசா - செயலாளர்
பா. முகிலன் - உபசெயலாளர்
த. அருணகிரிநாதன் - பொருளாளர்
கா. விவேகானந்தன் - சொத்துடமை அதிகாரி
ச. கைலாசபதி - ஆலயபரிபாலகர்

***திருவாளர்கள்:***

பொ.சிவலிங்கம்
மு.செல்லையா
க.இராசலிங்கம்
கொ.சிவயோகலிங்கம்
நா.வரதராசா
கு.பேரின்பநாதன்
செ.ஜெயகாந்தன்
திருமதி. இ.செல்வராணி

**காப்பாளர்** : திரு.ச. மகாலிங்கம்

**கணக்காய்வாளர்** : செல்வி இ. கலைச்செல்வி ஆகியோர் ஆவார்.

இவர்கள் தமது ஆலயத்தொண்டினைத் தொடர்ந்து சிறப்புற ஆற்றிவரப் பள்ளம்புலத்து முருகனை வேண்டி நிற்போம்.

சித்திரத்தேரும், தீர்த்தக்கேணியும் ஆலயத்திற்கு இன்று வேண்டி நிற்பவை. அவற்றை நிறைவேற்றி வைக்கவேண்டிய மனோபலத்தையும், ஆன்மீக சக்தியினையும் அடியார்களுக்குத் தந்தருள வேண்டுமென்று முருகன் அருளை வேண்டி நிற்போம்.

எமது ஆலயத்தொண்டு மேன்மேலும் வளர்ச்சி பெறட்டும். ஆலயம் சிறப்புப் பெறட்டும். ஆன்மீக சக்தியும், அருளொளியும் மலரட்டும்.

" **சிவதொண்டு செய்வார்க்கு செல்வமுண்டு கல்வியுமுண்டு**
**சிவதொண்டு செய்வார்க்கு சீருமுண்டு பேருமுண்டு**
**சிவதொண்டு செய்வார்க்கு சிந்தைத் தெளிவுமுண்டு**
**சிவதொண்டு செய்வார்கள் சேருவரோ தீ நெறியில்**"

என்ற யோகர் அருள்வாக்கு நமக்கு வழிகாட்டட்டும்.

எமது நாட்டில் போர் அனர்த்தம் நீங்கவேண்டும். அச்சமும் பீதியும் அகலவேண்டும். புலம் பெயர்ந்த எமது கிராமமக்கள் எமது மண்ணுக்குத் திரும்பவேண்டும். எமது கிராமம் புதுப்பொலிவு பெறவேண்டும். நல்வாழ்வு மலரவேண்டும் என்று எல்லாம் வல்ல எமது பள்ளம்புலத்து முருகனை வேண்டி நிற்போம்.

" **உருவாய் அருவாய் உளதாய் இலதாய்**
**மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்**
**கருவாய் உயிராய் கதியாய் விதியாய்**
**குருவாய் வருவாய் அருள்வாய் குகனே!**

- கந்தரனுபூதி.



முருகப்பெருமானின் அருட்காட்சி

# பள்ளம்புலம் முருகன் மீது பக்திப்பாமாலைகள்
## சரவணை பள்ளம்புலம் முருகமூர்த்தி திருப்பதிகம் பாடல்கள் - 10 இல் 02

திருவந்த செங்கமல முதயகா லத்தலர்ந்
திட்டதென வந்தவாறு
திருவதன முங்கருணை வழிகின்ற வாறிரு
திருக்கண்க ளுஞ்சகந்த
மருவந்த தேன்றுளித் திடுமெழிற்
செச்சை மலர் மாலைதிக ழாறிரண்டு
வாகுமஞ் சாதருள்செ யபயகர மும்வர
மெலாந்தரும் வரதகரமுந்
தெருமந்த வொளிதந்த வேல்முதல
மருவிய திருக்கைக ளுஞ் சிறந்த
சேயொளிப் பாதார விந்தமுஞ் சிறியனேன்
சிந்தையி னிருக்கவென்றும்
பருவர லிலாதுறப் பன்னிரு கடைக்கணருள்
பாலிகை லாசபதியின்
பாலகுக குமரசுப் பிரமணிய பள்ளம்
புலத்தளிச் சரவணபவா. (1)

பொன்னினழ கொடுசெய்து நவமணி
யழுத்தியொளி பொலிமௌலி மூவிரண்டும்
பொற்புற்ற நெற்றியிற் சுட்டியும் பட்டமும்
புகலுமிரு பாலுமிலகி
மன்னியழ கெய்தலிற் றருகின்ற காதணிகள்
வருகுழைகள் பன்னிரண்டும்
மார்பிலணி யுந்தவள ரத்தின மதாணியும்
வயினுதர பந்தனமுநன்
குன்னுபய பாதமலர் களிலிட்ட
தண்டையு மொலிக்குஞ் சிலம்புமழக
துறுசிறு சதங்கையு முளங்குளிர
வேகலின் கலினெனப் புகழையடியார்
பன்னமயில் மீதிவர்ந் திருவரொடு
வந்தருட் பாலிகை லாசபதியின்
பாலகுக குமரசுப் பிரமணிய பள்ளம்
புலத்தளிச் சரவணபவா. (2)

## சரவணை பள்ளம்புலம் முருகமூர்த்தி திருவூஞ்சல் பாடல்கள் ~ 10 இல் 02

பொருளிருந்த நால்வேதங் கால்க ளாகப்
பொருந்தவொளி ருபநிடதஞ் சட்ட மாகத்
தெருளிருந்த ஆகமமே விட்ட மாகத்
திகழறுபான் னான்குகலை கயிற தாக
மருளிருக்கு மோரெழுத்தே பீட மான
மந்திரசிம் மாசனலில் வூஞ்சல் மேவி
யருளுளபள் ளம்புலத்தில் வள்ளி தெய்வ
யானையொடுந் திருமுருக ஆடீரூஞ்சல். (1)

செய்யவர விந்தமுகத் தருள்நின் றாடச்
செவிமகர குண்டலங்காற் சிலம்பொ டாட
வுய்யவரு மயிலாடச் சேவ லாட
ஓலியலெழி லாலவட்டஞ் சிவிறி யாட
மெய்யடியார் கைகளில்வெண் கவரி யாட
வித்தகநற் பத்தர்களா னந்தத் தாட
ஐயுள பள்ளம்புலத்தில் வள்ளி தெய்வ
யானையொடுந் திருமுருக ஆடீரூஞ்சல். (2)

## சரவணை பள்ளம்புலம் திருமுருகரலங்காரம் பாடல்கள் ~ 100 இல் 02

முற்றறி வுற்ற முழுமுத லாய முருகமுற்றக்
கற்றறிந் தார்க்கு மெட் டாநின் பரமார் கலைக்கடலிற்
சிற்றறி வுக்கெட் டியசில வாற்றுதி செய்யவந்தேன்
பொற்றளிப் பள்ளம் புலக்குக வேற்றருட் பூர்த்திசெய்யே. (1)

கந்தா நமமயில் வந்தாய் நமவயில் கைப்பரித்த
வெந்தாய் நமசிவன் மைந்தர் நமவிண் ணிமையவர்க்குத்
தந்தாய் நமவருட் சிந்தே நமநற் சரவணத்தில்
வந்தாய் நமதிருப் பள்ளம் புலத்து வரநமவே (2)

## சரவணை பள்ளம்புல யமகவந்தாதி
## பாடல்கள் - 100 இல் 02

திருவே திகழரு மார்பரி பங்கயன் றேடரிய
திருவே திகழரு மைந்தா னனனம் பிகைதிருச்சேய்
திருவே திகழரும் பொற்புர வண்ணன் றிகழ்ந்திடுமென்
திருவே திகழரும் பள்ளம் புலத்தளித் தெய்வதமே. (1)

நின்மல னேமல மாயைகன் மங்களை நீக்கவல
நின்மல னேமல மாயையின் மைந்தனை நீள்கொடியும்
நின்மல னேமல நீங்கிய மஞ்ஞையு மாக்கியமா
நின்மல வம்புல வென்மல நீக்கலு நின்கடனே. (2)

## சரவணை பள்ளம்புலம்
## முருகமூர்த்தி திருவிரட்டை மணிமாலை
## பாடல்கள் - 20 இல் 02

**வெண்பா**

அருளே யரவிந்த வானை மாறார் மெய்ப்
பொருளே மிக்காரில் புலவ - தெருள்வடிவாய்ப்
பள்ளம் புலத்தளிவாழ் பாலசுப்ர மண்யவெற்கு
முள்ளம் புலம் பெறவா வுற்று (1)

**கலித்துறை**

வாவுற் றுலகு தழைத்தோங் கவாடும யின் மிசையே
மேவுற் றில கெழிற் சேவற் பாதகை மிளிரவமர்த்
தாவுற் றவேல்வ லனேந்திப் பள்ளம்புலந் தன்னில்வந்தோய்
பூவுற்ற நின்னடி நாளும் வணங்கப் புரியருளே. (2)

**சரவணையூர்**
**திரு ஆ. தில்லைநாதப் புலவர்**

ஓம் முருகா

# பள்ளம்புலக் குமரா!

மன்னா மயில்வண்ணா மாதிருபால் சூழ்வேந்தா
ஐயா எழில்மயிலா அடியர் உளத்தெழில் குமரா
அண்ணாமலை மைந்தா அன்பர்துயர் தீர்மருந்தா
பொய்யா மனமுருகி பொழிந்திடு கண்ணீர் மழையை
கண்ணால் நீர் ஒற்றி கனன்றமனம் குளிராக
மெய்யாயுன் அருள்கூட்டி மேவுமடியார் துயரை
விண்ஞாயிறு பனியாய் விரைந்துருகி மறைந்திடவோர்
பொன்னாள் அருளாயோ பொலிந்திடு பள்ளம்புலவா.

முப்புறமும் மருதநிழல் முன்போ நற்புளியரசு
கைப்புறத்தில் இருமாதர் களிநடன மால் மருகா
எப்புறமும் உன்னடியார் இருந்து பதிநாடி நிதம்
அற்புதத்துத் தெய்வமென ஆனதுயர் களையவர
பச்சைமயில் நடனமிடு பள்ளம்புலக் குமரா!
பொற்பதத்தைப் பிடித்தலறும் பொன்னடியார் நினைவற நீ
சித்திரத்து மாதரொடு சிரித்து விளையாடலுறல்
அற்புதமோ இங்கதுதான் ஆனந்தமோ கூறாய்.

வள்ளிமணாளா அம்மாது தெய்வயானை குகா
பள்ளிகொளலாமோ உன்பக்தரெலாம் விழித்திருக்க
துள்ளிமயிலாடலுற துடித்ததன் மேல் நீயுறைய
அள்ளியிரு மாதருனை அணைத்தருகாய் மேவலுற
எள்ளிநகை யாடலுறும் இணைந்தபகை தான்முடித்து
பள்ளிகொள அடியவரும் பள்ளபுலக்குமரா
தெள்ளு தமிழ்க் குறைநீக்கி தேன்தமிழின் குரலோங்க
நல்ல இசைமீட்டு நாயகனே களிதருவாய்.

**தி.ஸ்ரீகந்தராசா**
**பள்ளம்புலம்**

**"அருள்கவி"**

# சரவணை ~ பள்ளம்புலம். (01)

## தாய்போலும் தங்கமுருகன்!

### பல்லவி

தாயினைப் போலொரு தண்ணொளி பரவ
நீயருள் செய்கின்ற நிலமல்லவா முருகா..
- தாயினைப்

### அனுபல்லவி

கோயிலும் சுனையும் குடிகளும் இலங்கும்
குமரக் கோட்டம்நின் குடிவல்லவா முருகா..
- தாயினைப்

### சரணம்

கல்லுப்பு ளித்துநெல்லுக் கதிர்கொட்டி ஆடுகின்ற
சொல்லுக்கு ளித்துவரும் சிந்துர(த்து) வயல்முருகா
அல்லும் பகலுமு(ன)னை ஆரவா திக்கையிலே
எல்லையில்லா இன்பமது எனக்கருளும் வேல்முருகா..
- தாயினைப்

வள்ளிதெய்வ யானையொடு வாசலிலே எழுந்தருள
உள்ளமொரு மத்தாப்பாய் ஓடி விரிந் தாடுதையா!
பள்ளம்புல முருகா பாவெடுத்துத் தந்தருளும்
வள்ளலே செந்தூரா மயிலேறும் வடிவேலா...
- தாயினைப்

(02)

## பள்ளம்புலம் குமரக்கோட்டம் பாசமுருகன்!

### பல்லவி

பள்ளம்புலம் வதியும் உள்ளக் குமரனவன்
பாரெனக்குக் காட்டுவித்த பாச இறைவன்
- பள்ளம்

### அனுபல்லவி

வெள்ளவயல் சூழ்ந்திருக்க வீற்றிருக்கும் வேல்முருகன்
சொல்லியெனைக் கனடாவில் சேர்த்துவிட்ட மால்மருகன்
- பள்ளம்

### சரணம்

ஓரிரவு என்விழியில் உமைபாலன் கோவிலிலே
நானிருந்து பாடுகிறேன் நம்பியெனைப் பிடித்து.
வாரெடுத்து விளையாடி வண்ணமிட்டான் காலையிலே
நீருடனே வாருமென்ற நீட்டோலை வந்ததையா!
- பள்ளம்

சோதனைக்குப் பாதைசொல்வான் சுந்தரத்துத் தமிழளித்தான்
வீதிவழி வீற்றிருந்து விளையாடி மணியொலிப்பான்
நாதமெனப் புலவருக்கு நல்லியலைக் கொடுத்திடுவான்
நாடிவந்து அருள்கொடுத்து நாழியிலே மறைந்திடுவான்
- பள்ளம்

## (03) கோலமயில் முருகன்வாழ் குமரக்கோட்டம்

வேலணையும் சரவணையும் மயிலப் புலமார்
விரிந்தவயல் நிலம்நாடி வீற்றே யிருக்கும்
கோலமயில் முருகன்வாழ் குமரக் கோட்டக்
கோயிலெனச் சிந்துரநின் குடிலே கண்டேன்
பாலவடி வானவனே பாவை வள்ளிப்
பக்கத்தில் தெய்வானைப் பதமும் சுழச்
சோலையிடும் சிவமைந்தன் சிறப்புப் பாடச்
செம்பவளத் தொளிகாட்டும் திருவே கண்டேன்!
ஆடுகின்ற மாமயிலும் அஞ்சேல் என்கும்
அருள்கின்ற வேல்காட்டும் அழகே என்றும்
பாடுகின்ற உன்தமிழே பக்தி யாகிப்
பரவுகின்ற செங்கழலே பயிலக் கண்டேன்
மூடுநிசி வேளையிலும் மணியே கேட்கும்
முருகாவுன் விளையாடல் மோகம் கண்டோர்
கூடுகின்ற பெருஞ்சாரக் குமரக் கோட்டம்
..........................................................................

## (04) கவிகொடுக்கும் கந்தன்

பள்ளம்புலம் வதியும் வள்ளிக் கணவனவன்
உள்ளத்தில் நிறைந்தானடி - கிளியே
உள்ளத்தில் நிறைந்தானடி !
தில்லை நாதனுமே நல்ல கவிபடைக்க
தேனாய் இருந்தானடி - முருகன்
தேனாய் இருந்தானடி!

அள்ளும் கவிகொடுக்க தெள்ளு தமிழ்ப்புலவர்
துள்ளித் திரிந்தாரடி - கிளியே
துள்ளித் திரிந்தாரடி!
பள்ளம் புலமுருகன் வெள்ளம் எனக்கொடுக்கும்
பாட்டுக்கு எல்லையில்லை - கிளியே
பாட்டுக்கு எல்லையில்லை!

**சரவணை - கிழக்கு**
**பள்ளம்புலம்**

**கவிஞர் வே. இராசலிங்கம்**
**(கனடா)**

ஓம் முருகா

## பள்ளம்புலம் அருள்மிகு முருகமூர்த்தி சுவாமி பக்திப்பாடல்கள் - 7 இல் 03

பள்ளம் புலத்தின் பதியாகிப்பக்தர்
உள்ளக் கோயில் இடங் கொண்ட
விள்ளற்கரிய வேற்சுடரே
தெள்ளத்தெளிந்த தமிழ் அருளே (1)

அம்மை அடியார் ஆக்கிய கோயில்
செம்மை யாமருட் பொலிவுடன் விளங்க
அம்மை அப்பனின் ஒரு திருமுருகன்
எம்மை ரட்சித்து இலங்குக இனிதே (2)

பள்ளம்புலத்தெம் பரமமுதலே
உள்ளக் குகையிற் குடி கொண்டவனே
விள்ளும் புலமை மிகு செவ்வேளே
அள்ளக் குறையா அமுதே சரணம்! (3)

**சரவணை**
**வேலணை**

**ஸ்ரீ பள்ளம்புலம்**
**முருகதாசன்**

## திருப்பள்ளம்புலத் திருமுருகர் பதிகம் பாடல்கள் 10 இல் 02

ஆறுமுகமும் ஆறிரு தோளும்
அருள் கூர் திருநோக்கும்
ஏறு மயிலும் சேவற்கொடியும்
வேலுமெம் துயர்காட்டை
நீறுபடுத்த நின்றோர் சேர் பள்ளம்
புலத்தார் வினைதீர்க்க
ஆறுபடுத்தும் அப்பா முருகா!
நாமுன் அடைக்கலமே. (1)

வந்திப்பன் நின்திருப் பாதம்
வாழ்த்துவன் நின்பேர் புகழை
சந்திப்ப தடியாரைச் சமரில்
சூர் தடித்த வேலைச்
சிந்திப்பன் என்றுந் திருப்பள்ளம்
புலஞ்சேர்ந்து எம்மையே
பந்தித்த வினை தீர்த்தா
யென்று பரவுவனே. (2)

**வேலணை** **கவிஞர் தில்லைச்சிவன்**

## *வேலும் மயிலுடனே..*

வேலும் மயிலுடனே விரைந்தோடி வந்திடுவாய்
வேலவனேதிரு மாலவனின் மருகா!
(வேலும் மயிலுடனே)
பாலும் பழமும் கொண்டு
பக்தர் உன்னைப் பூசிக்க
பாலசுப்பிரம் மண்யா
பரிந்தருள் செய்திடுவாய் - வேலும் மயிலுடனே...

பள்ளம்புலம் வதியும்
பாலா சிவபாலா
எல்லையில்லாத அருள்
எழில்மிகு வடிவேலா - வேலும் மயிலுடனே...

தொல்லை துன்பம் அகற்றி
தொண்டரைக் காக்கும் எழில்
கல்லைக் கனிந்துருக்கும்
கருணை வடிவழகா - வேலும் மயிலுடனே...

# முருக நாமாவளி

1. வேல்மருகா மால்மருகா வாவா சண்முகா
கால் பிடித்தேன் காத்தருள வாவா சண்முகா

நால்வேதப் பொருளானாய் நாதா சண்முகா
நல்லதெல்லாம் உன்பால் கொண்டாய் நாதா சண்முகா

செல்லமாகச் சிவை அணைக்கும் சேயே சண்முகா
செங்கதிர் வேல் தாங்கிஎன் தேவா சண்முகா
(வேல்)

ஆறுபடை வீடுடைய ஆண்டவா சண்முகா
ஆனந்தமே அற்புதமே ஆண்டவா சண்முகா
தேறுதலைத் தருபவனே தேவா சண்முகா
சிங்கார ஓங்கார சீலனே சண்முகா
(வேல்)

நாறுமலை அணிமார்பா நாயகா சண்முகா
நால்வேதப் பொருளான நாயகா சண்முகா
ஏறுமயில் வாகனனே ஏந்தலே சண்முகா
நீறணிந்தார் வினைபோக்கும் நீதனே சண்முகா
(வேல்)

பாடும்பணி தந்திடுவாய் பண்டிதா சண்முகா
பக்தருடன் கூட்டிடுவாய் முக்தனே சண்முகா
ஆடும்சேவற் கொடியழகா ஆண்டவா சண்முகா
அடியாருள்ளக் குகையமர்ந்த ஆனந்தா சண்முகா
(வேல்)

வீடும் நாடும் நின் திருத்தாள் வேண்டினேன் சண்முகா
வீரன் சூரன் உடல் கிழித்த வேலனே சண்முகா
ஓடும் மனம் உன்னை நாட ஆடிவா சண்முகா
ஒருவனே என் வினையழித்த உத்தமா சண்முகா
(வேல்)

எல்லை யில்லா ஆனந்தனே ஏகாந்தா சண்முகா
எங்கும் நிறை அன்புருவே என்முருகா சண்முகா
தில்லையிலே ஆடும்தேவி பாலகா சண்முகா
திருட்டுத்தனமாய்க் குறக்கொடியைக் கொண்டவா சண்முகா
(வேல்)

தொல்லை எலாங் கடந்தபதம் தந்திடுவாய் சண்முகா
தோத்தரித்தோம் எங்கள் முன்னேவந்திடாய் சண்முகா
கல்லையொத்த மனமுருகக் கருணைசெய் சண்முகா
கல்லெனச்சிலம் பொலிக்க ஓடிவா சண்முகா
(வேல்)

2)

அன்பருக்கு அன்பனே நீ வா வா முருகா
ஆறுபடை வீடுடையாய் வா வா முருகா
இன்பமய சோதியே நீ வா வா முருகா
ஈசனுமை பாலகனே வா வா முருகா
உலகநாதன் மருகனே நீ வா வா முருகா
ஊமைக்கருள் புரிந்தவனே வா வா முருகா
எட்டுக்குடி வேலவா நீ வா வா முருகா
ஏறுமயில் ஏறியே நீ வா வா முருகா
ஐங்கரனுக் கிளையவனே வா வா முருகா
ஆறுமுக வேலவனே வா வா முருகா
ஓய்யாரி வள்ளி லோலா வா வா முருகா
ஓங்காரத் தத்துவமே வா வா முருகா
ஔவைக் குபதேசித்தவா வா வா முருகா
அகில லோக நாயகனே வா வா முருகா
ஓடிவா நீ ஓடிவா நீ வா வா முருகா
ஆடிவா நீ ஆடிவா நீ வா வா முருகா

3) குமரமலை வீற்றிருக்கும் எங்கள் குலதெய்வம் தேவ
குஞ்சரியை மணம் புரிந்த எங்கள் குலதெய்வம்
சரவணையில் வந்துதித்த எங்கள் குலதெய்வம் சிவ
சண்முகமாய் வந்துதித்த எங்கள் குலதெய்வம்
பழனிமலை வீற்றிருக்கும் எங்கள் குலதெய்வம் சிவ
பக்தர்களைக் காத்தருளும் எங்கள் குலதெய்வம்
பண்டாரம் போலிருக்கும் எங்கள் குலதெய்வம் தேவ
பச்சை மயிலேறி வரும் எங்கள் குலதெய்வம்
ஆண்டி வேடம் பூண்டிருக்கும்எங்கள் குலதெய்வம் அவர்
அண்டி னோரை ஆதரிக்கும் எங்கள் குலதெய்வம்
வேலாயுதம் தரித்த எங்கள் குலதெய்வம் வடி
வேல்முருக நாமம் படைத்த எங்கள் குலதெய்வம் பால
தெண்டாயும் தரித்த எங்கள் குலதெய்வம்
தெண்டபாணி பேருடைய எங்கள் குலதெய்வம்
வீபூதி தரித்திருக்கும் எங்கள் குலதெய்வம் அவர்
வீரமயிலேறி வரும் எங்கள் குலதெய்வம்
ஆறுமுகமான பொருள் எங்கள் குலதெய்வம் அவர்
ஆறுபடை வீடுடைய எங்கள் குலதெய்வம்
சிவனாருக் குபதேசித்த எங்கள் குலதெய்வம் சிவ
சுப்ரமண்ய வேருடைய எங்கள் குலதெய்வம்
சுப்ரமண்ய வேருடைய எங்கள் குலதெய்வம்
(எங்கள் குலதெய்வம்)

## கும்மி கொட்டுங்க

கொட்டுங்க கொட்டுங்க கும்மியடி - நீங்க
குமரனைப் பாடியே கும்மியடி
கட்டுங்க கட்டுங்க காவடியை உங்கள்
கைகளைச் சேருங்கள் சேவடியே (கொட்)

பாலமுருகனைப் பாருங்கடி... அவன்
பாதத்தில் சென்னியைச் சேருங்கடி
கோலமுருகனைப் பாருங்கடி நன்றாய்
கும்மியும் கொட்டியே ஆடுங்கடி (கொட்)

நீலமயிலேறி வருவானடி அவன்
நித்திய வாழ்வும் தருவானடி
காலனை வெல்லும் வீரனடி - அவன்
கந்த புராணத்துச் சூரனடி (கொட்)

குன்றத்தில் வாழும் குமரனடி ... அவன்
குறைகளைத் தீர்க்கும் அமரனடி
பன்னீரால் அபிஷேகம் செய்யுங்கடி - நீங்க
பக்தி நலத்தாலே உய்யுங்கடி (கொட்)

எல்லோரும் ஒன்றாய்க கூடுங்கடி நம்ம
ஏரக நாதனைப் பாடுங்கடி
கல்லான மனதையும் தள்ளுங்கடி - நீங்க
கந்தனை மனத்திலே கொள்ளுங்கடி
(கொட்)

***ராகம் : புன்னாகவராளி*** ***தாளம் : ஆதி***

1) அரஹரோஹரா சுவாமி - அரஹரோஹரா
அரஹரோஹரா சுவாமி - அரஹரோஹரா

2) திருச்செந்தூர் முருகனுக்கும் - அரஹரோஹரா
திருத்தணிகை வேலனுக்கும் - அரஹரோஹரா

3) பழனிமலைப் பாலனுக்கும் - அரஹரோஹரா
சுவாமிமலைக் கிழவனுக்கும் - அரஹரோஹரா

4) கதிர்காம வேலனுக்கும் - அரஹரோஹரா
கந்தசாமிக் கடவுளுக்கும் - அரஹரோஹரா

5) கலியுக வரதனுக்கும் - அரஹரோஹரா
கண்கண்ட தேவனுக்கும் - அரஹரோஹரா

6) வெள்ளிமலை வேலனுக்கு - அரஹரோஹரா
வள்ளிமண வாளனுக்கும் - அரஹரோஹரா

7) அபிடேகப் பிரியனுக்கும் - அரஹரோஹரா
ஆனந்த வடிவனுக்கும் - அரஹரோஹரா

8) குமாரகோவில் முருகனுக்கும் - அரஹரோஹரா
குறத்தியம்மை கணவனுக்கும் - அரஹரோஹரா

**ராகம் : ஹரிகாம்போதி** **தாளம் : ஆதி**

1) ஓம் முருகா வேல் முருகா வா வா ஷண்முகா
கால் பிடித்தோம் காத்தருள வா வா ஷண்முகா
அன்பருக்கு அன்பனே நீ வா வா ஷண்முகா
ஆறுபடை வீடுடையாய் வா வா ஷண்முகா

2) இன்பமய ஜோதியே நீ வா வா ஷண்முகா
ஈசனுமை பாலகனே வா வா ஷண்முகா
உரகநாபன[1] மருகனே நீ வா வா ஷண்முகா
ஊமைக் கருள் புரிந்தவனே வா வா ஷண்முகா

3) எட்டுக்குடி வேலவா நீ வா வா ஷண்முகா
ஏறுமயில் ஏறியே நீ வா வா ஷண்முகா
ஐங்கரனுக் கிளையவனே வா வா ஷண்முகா
ஆறுமுக வேலவனே வா வா ஷண்முகா

4) ஒய்யாரி வள்ளிலோலா வா வா ஷண்முகா
ஓங்கார தத்துவமே வா வா ஷண்முகா
ஔவைக் குபதேசித்தவா வா வா ஷண்முகா
அகிலலோக நாயகனே வா வா ஷண்முகா

5) ஆறுபடை வீட்டில் வாழும் - ஆண்டவனே சண்முகா
உன் ஆறுமுகம் காண வந்தேன் ஆடிவா சண்முகா
கூர்வடிவேல் தாங்கிநின்ற கோலா கலா சண்முகா
ஏறுமயில் ஏறி நின்று ஆடவா சண்முகா

6) திருப்புகழைப் பாடவைத்த தேவனே என் சண்முகா
நின், திருப்படியில் ஏறி வந்தோம் தேவனே சண்முகா
ஒரு முகமாய்க்கூடி வந்தோம் ஓங்கார சண்முகா
குரு முகமாய் வந்தாளும் குருபரனே சண்முகா

## திருப்புகழ்

அகரமு மாகி அதிபனுமாகி
அதிகமு மாகி அகமாகி
அயனென வாகி அரியென வாகி
அரனென வாகி அவர்மேலாய்
இகரமு மாகி எவைகளு மாகி
இனிமையு மாகி வருவோனே
இருநில மீதில் எளியனும் வாழ
எனதுமு னோடி வரவேணும்
மகபதி யாகி மருவும்வ லாரி
மகிழ்களி கூரும் வடிவோனே
வனமுறை வேட னருளிய பூஜை
மகிழகதிர் காம முடையோனே
செககண சேகு தகுதிமி தோதி
திமியென ஆடு மயிலோனே
திருமலி வான பழமுதிர் சோலை
மலைமிசை மேவு பெருமாளே 2

# பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் அருளிய "குமாரஸ்தவம்"

| | | |
|---|---|---|
| ஓம் | ஷண்முக | பதயே நமோ நமஹ: |
| ஓம் | ஷண்மத | பதயே நமோ நமஹ: |
| ஓம் | ஷட்க்ரீவ | பதயே நமோ நமஹ: |
| ஓம் | ஷட்க்ரீட | பதயே நமோ நமஹ: |
| ஓம் | ஷட்கோண | பதயே நமோ நமஹ: |
| ஓம் | ஷட்கோச | பதயே நமோ நமஹ: |
| ஓம் | நவநிதி | பதயே நமோ நமஹ: |
| ஓம் | சுபநிதி | பதயே நமோ நமஹ: |
| ஓம் | நரபதி | பதயே நமோ நமஹ: |
| ஓம் | கரபதி | பதயே நமோ நமஹ: |
| ஓம் | நடச்சிவ | பதயே நமோ நமஹ: |
| ஓம் | ஷடக்ஷர | பதயே நமோ நமஹ: |
| ஓம் | கவிராஜ | பதயே நமோ நமஹ: |
| ஓம் | தவராஜ | பதயே நமோ நமஹ: |
| ஓம் | இகபர | பதயே நமோ நமஹ: |
| ஓம் | புகழ்முநி | பதயே நமோ நமஹ: |
| ஓம் | ஜயஜய | பதயே நமோ நமஹ: |
| ஓம் | நயநய | பதயே நமோ நமஹ: |
| ஓம் | மஞ்சுள | பதயே நமோ நமஹ: |
| ஓம் | குஞ்சரீ | பதயே நமோ நமஹ: |
| ஓம் | வல்லீ | பதயே நமோ நமஹ: |
| ஓம் | மல்ல | பதயே நமோ நமஹ: |

| | | |
|---|---|---|
| ஓம் | அஸ்த்ர | பதயே நமோ நமஹ: |
| ஓம் | சஸ்த்ர | பதயே நமோ நமஹ: |
| ஓம் | ஷஷ்டீ | பதயே நமோ நமஹ: |
| ஓம் | இஷ்டீ | பதயே நமோ நமஹ: |
| ஓம் | அபேத | பதயே நமோ நமஹ: |
| ஓம் | சுபோத | பதயே நமோ நமஹ: |
| ஓம் | வ்யூஹ | பதயே நமோ நமஹ: |
| ஓம் | மயூர | பதயே நமோ நமஹ: |
| ஓம் | பூத | பதயே நமோ நமஹ: |
| ஓம் | வேத | பதயே நமோ நமஹ: |
| ஓம் | புராண | பதயே நமோ நமஹ: |
| ஓம் | ப்ராண | பதயே நமோ நமஹ: |
| ஓம் | பக்த | பதயே நமோ நமஹ: |
| ஓம் | முக்த | பதயே நமோ நமஹ: |
| ஓம் | அகார | பதயே நமோ நமஹ: |
| ஓம் | உகார | பதயே நமோ நமஹ: |
| ஓம் | மகார | பதயே நமோ நமஹ: |
| ஓம் | விகாச | பதயே நமோ நமஹ: |
| ஓம் | ஆதி | பதயே நமோ நமஹ: |
| ஓம் | பூதி | பதயே நமோ நமஹ: |
| ஓம் | அமார | பதயே நமோ நமஹ: |
| ஓம் | குமார | பதயே நமோ நமஹ: |

# ஆலய விழாக்கள் பற்றிய விபரங்கள்.

## பெருந்திருவிழா

| விழாவிபரம் | உபயகாரர் விபரம் |
|---|---|
| 1 ஆம் திருவிழா கொடியேற்றம் | திரு.ப.பன்னீர்ச்செல்வம் குடும்பம் |
| திரு.ப.பொன்கைமாறன் குடும்பம் | திருமதி.தி.பாலசுந்தரம் குடும்பம் |
| 2 ஆம் திருவிழா | அமரர் க.கந்தையா குடும்பம் |
| 3 ஆம் திருவிழா | திரு.இ.இரகுநாதன் குடும்பம் |
| 4 ஆம் திருவிழா | திருமதி.நா.சுப்பிரமணியம் குடும்பம் |
| | அமரர்.க.நடராசா குடும்பம் |
| | திரு.ம.க.நல்லையா குடும்பம் |
| 5 ஆம் திருவிழா சன்டேஸ்வரர் | திரு.ம.மதியழகன் குடும்பம் |
| உற்சவம் | திரு.ம.அன்பழகன் குடும்பம் |
| 6 ஆம் திருவிழா | திரு.ச.மகாலிங்கம் குடும்பம் |
| | திரு.பொ.பத்மநாதன் குடும்பம் |
| | திரு.பொ.பேரின்பநாதன் குடும்பம் |
| 7 ஆம் திருவிழா | திருமதி.நா.இராசரெத்தினம் குடும்பம் |
| 8 ஆம் திருவிழா வேட்டைத் | திரு.க.சண்முகநாதன் குடும்பம் |
| திருவிழா | திரு.க.கந்தசாமி குடும்பம் |
| | திரு.செ.தருமராசா குடும்பம் |
| 9 ஆம் திருவிழா தேர்த்திருவிழா | அமரர்.க.தியாகராசா குடும்பம் |
| | அமரர்.க.ஜெகதீஸ்வரன் குடும்பம் |
| 10 ஆம் திருவிழா தீர்த்தத் | அமரர்.கா.நாகநாதி குடும்பம் |
| திருவிழா | அமரர்.நா.செல்லப்பா குடும்பம் |
| 11 ஆம் திருவிழா திருக்கல்யாணம் | திரு.வே.கனகரெத்தினம் குடும்பம் |
| வைரவர்மடை | திரு.சு.இராமச்சந்திரன் குடும்பம் |

## கந்தசஷ்டி விழா

| விழா விபரம் | உபயகாரர் விபரம் |
|---|---|
| 1 ஆம் நாள் | திரு.த.அருணகிரிநாதன் குடும்பம் |
| 2 ஆம் நாள் | திரு.சு.பரமானந்தன் குடும்பம் |
| 3 ஆம் நாள் | திரு. கு. குகன் குடும்பம் |
| 4 ஆம் நாள் | திரு.இ.பத்மநாதன் குடும்பம் |

| | | |
|---|---|---|
| 5 ஆம் நாள் | சூரன் தலைகாட்டல் | அமரர்.வே.சதாசிவம் குடும்பம் |
| 6 ஆம் நாள் | சூரன்போர் | திரு.க.யோகேஸ்வரன் குடும்பம் |
| | | திரு.இ.பிரகஸ்பதி குடும்பம் |
| | பிராயச்சித்த அபிஷேகம் | திரு. காந்தமூர்த்தி குடும்பம் ஆகுகன் குடும்பம் |
| 7 ஆம் நாள் | திருக்கலியாணம் | திரு.சங்கரப்பிள்ளை குடும்பம் |

## கார்த்திகைத் திருவிழா

| மாதம் | | உபயகாரர் |
|---|---|---|
| தை | | திரு.க.பூபாலசிங்கம் குடும்பம் |
| மாசி | | திரு.ப.தேவநாதன் குடும்பம் |
| பங்குனி | | திரு. தி. திருஞானசம்பந்தன் குடும்பம் |
| சித்திரை | | திரு.த.சிலம்பின்செல்வன் குடும்பம் |
| வைகாசி | | திரு.ந.புஷ்பராசா குடும்பம் |
| ஆனி | | திரு.ப.முகிலன் குடும்பம் |
| ஆடி | | திரு.சு.சுந்தரேசன் குடும்பம் |
| ஆவணி | | திரு.கு.பேரின்பநாதன் குடும்பம் |
| புரட்டாதி | | திரு.மு.அருளானந்தசிவம் குடும்பம் |
| ஐப்பசி | | திரு.இ.பரநிருபசிங்கம் குடும்பம் |
| கார்த்திகை | கார்த்திகைவிளக்கீடு | திரு.சி.வரதலிங்கம் குடும்பம் |
| மார்கழி | | திரு.தி.சிவநேசபிள்ளை குடும்பம் |
| மேலதிகக்கார்த்திகை | | திரு.க.இராசலிங்கம் குடும்பம் |

## நவராத்திரி விழா

| விழா விபரம் | | உபகாரர்விபரம் |
|---|---|---|
| 1ம் நாள் | | திரு.ச.கைலாசபதி குடும்பம் |
| 2ம் நாள் | | திரு.ஆ.தேவராசா குடும்பம் |
| 3ம் நாள் | | திரு.க.விவேகானந்தன் குடும்பம் |
| 4ம் நாள் | | திரு.ந.சசீதரன் குடும்பம் |
| 5ம் நாள் | | திரு.சு.செல்வரெத்தினம் குடும்பம் |
| 6ம் நாள் | | திரு.ப.பரமானந்தம் குடும்பம் |
| 7ம் நாள் | | கோவில் உபயம் குடும்பம் |
| 8ம் நாள் | | திரு.மு.குமாரசுவாமி குடும்பம் |
| 9ம் நாள் | | திரு.சு.தில்லைநாதன் குடும்பம் |
| 10ம்நாள் | வாழைவெட்டு | திரு.நா.மகாலிங்கம் குடும்பம் |

ஓம் முருகா

## ஏனைய முக்கியவிழாக்கள்

| விழாவிபரம் | உபயகாரர் விபரம் |
|---|---|
| 1. தைப்பொங்கல் | திரு.சி.கணேசலிங்கம் குடும்பம் |
| 2. தைப்பூசம் | திரு.சு.மகேந்திரன் குடும்பம் |
| 3. வருடப்பிறப்பு | திரு.த.தனநாயகம் குடும்பம் |
| 4. கும்பாபிஷேக தினம் | திருமதி.லோ.விஜயலெட்சுமி குடும்பம் |
| 5. திருவெம்பாவை 10ம் நாள் | அமரர் V.N.இராமச்சந்திரன் குடும்பம் |

## ஆலயத்தின் முக்கிய நிகழ்வுகள் சில

1957 – பலநூற்றாண்டுகளாக இருந்த அறங்காவலர் நிர்வாகம், அறங்காவற் சபையிடம் ஒப்படைத்தமை.

1964 – ஆலயமறுமலர்ச்சிக்காலம் – பாலஸ்தாபனம் – திருப்பணிவேலைகள் ஆரம்பம்.

1965 – ஸ்ரீமுருகன் கூட்டுப் பிரார்த்தனைச்சபை ஆரம்பம்

19.06.1978 – கும்பாபிஷேகம் நிறைவுற்றமை

10.07.1978 – அறங்காவற்சபை "அமைப்புவிதி" (யாப்பு) நிறைவேற்றம்

20.06.1988 – அலங்காரத்திருவிழா – மகோற்சவவிழாவாக மாற்றம், கொடியேற்றவிழா ஆரம்பம்.

28.06.1988 – தேர்த்திருவிழா நிகழ்வு.

15.11.1988 – கந்த சஷ்டி விழா – சூரன் போர் விழா நிகழ்வு.

1990 – போரும்புலம் பெயர்வும். ஆலயக்கடமைகளில் தடை ஏற்பட்டமை.

1997 – மக்கள் மீள்குடியேற்றம் பெறல்.

21.05.1997 – தற்காலிக அறங்காவற்சபை நியமனம், ஆலய புணருத்தாரண வேலைகள் ஆரம்பம்.

28.03.1999 – நிரந்தர அறங்காவற்சபை நியமனம்.

07.05.1999 – பிரதிஷ்டா கும்பாபிஷேகம் நிறைவேற்றம்.

10.10.1999 – கும்பாபிஷேக மலர் வெளியீடு.

15.09.2008 – புதிய சித்திரத்தேர்த்திருப்பணி ஆரம்பம்

எந்தாயும் எனக்கருள் தந்தையும் நீ
சிந்தாகுலம் ஆனவை தீர்த்தெனையாள்
கந்தா! கதிர்வேலவனே! உமையாள்
மைந்தா! குமரா! மறைநாயகனே!.

– கந்தர்அனுபூதி

***

திருவடியுந் தண்டையுஞ் சிலம்பும் சிலம்பூடுருவப்
பொருவடிவேலும் கடம்புந் தடம்புய மாறிரண்டும்
மருவடிவான வதனங்களாறும் மலர்க்கண்களும்
குருவடிவாய்வந் தென்னுள்ளங் குளிரக்குதி கொண்டவே

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங் கோடன் மயூரமுமே

– கந்தரலங்காரம்

***

மரகத மயில்மேல் வருமுருகா
அரகர சிவசிவ அறுமுகவா
சரவணபவனே சண்முகனே
வரந்தர வாவா என்முன்னே
அரவணி சிவனா ரருள்பாலா
பரவ வரமருள் பரமதயாளா

***

சிவதொண்டு செய்வார்க்குச் சாந்தம் பொறுமையுண்டு
சிவதொண்டு செய்வார்க்குத் திரிகால உணர்ச்சியுண்டு
சிவதொண்டு செய்வார்க்குத் தீயபிணிநோயில்லை
சிவதொண்டு செய்வார்கள் தெய்வமே போல்வர்

– நற்சிந்தனை.





ஆறுமுகசுவாமி திருவாசல்

முந்தை வினையற
எந்தை முருகனை
சிந்தையில் ஏற்றி
கந்தபுராண படனம்
செய்தும் செய்வித்தும்
கந்தபுராண கலாச்சாரம்
பேணிய
முந்தையர் முதல்வியாம்
அம்மை அடிகளார்
ஆற்றிய பணியை
உவந்தேற்ற முருகன்
கோயில் கொண்டார்
பள்ளம் புலத்திலே
மருதவேலி சூழ்
மருதநிலமிது
திருவும் கல்வியும்
சீர்பெற்ற தலமிது
குறவள்ளி மணாளன்
தெய்வானை சமேதராய்
கையில் வேலுடன்
மயிலேறிக் காட்சி தரும்
திருக்கோயில்
கல்விக்காய் நோன்பிருக்க
கனிவுதரும் கந்தன் இவன்
தவிலொளி குழலொளி
கூட்டுப்பிரார்த்தனையுடன்
குமரன் வலம் வரும் கோயிலிது
புனிதர் வாழ் புண்ண்ணிய பூமியிது
மயிலேறும் முருகன்
தேரேறி வருவான் இங்கே

உலகார்சரண். ஆதிசி.

*Printed By :*
VIHADAN PRINTER
No - 541/2, Galle Road, Wellawatta, Colombo -06
Tel : 2504370, Fax : 2361329
E-mail : vihadanpr@yahoo.co.uk